உ

கடவுள் துணை

சுபமஸ்து.

இஃது

# துர்வாத துர்ப்போத
# தூஷண கண்டனம்.

ஸமுஷ்டி ஜாதி பேதாபேதாதிகாரிகளின்

லக்ஷணம்.

இஃது

சேலம் ஜில்லா ஆத்தூர் தாலூக்கா பெத்திநயக்கன்

பாளையத்திலிருக்கும் தேவஸ்தானம் சபை மெம்பருண

## சே. சுப்பராமய்யரவர்களால்

இயற்றப்பட்டு

சேலம் ஷண்முகவிலாஸம் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

22-ஆ ஏப்ரல்

R6
N22
186858

உ

கடவுள் துணை.

# துர்வாத துர்[illegible]ர்த

# தூஷணைகண்டனம்.

உலகத்தில் சில தனகன வித்துவான்கள் ஜாதிபேதம் இல்லையென்றும், எல்லா ஜாதிகளும் ஒன்றே என்றும் சொல்லிக்கொண்டு வர்ணாசிரம பேதங்களையும் கைவிட்டு வெளிவந்திருக்கிறார்களல்லவா? இது எந்த மத, வேத, சாஸ்திர, சட்ட பிரமாணங்களைக் கொண்டோ? எந்த சுவானுபவத்தைக் கொண்டோ? அதுகள் இன்னதிற்கென்று தெரியவருகிறதில்லை, இவர்களை வினவிக் கேட்டுக்கொள்ள வேண்டிய விபரீத பாவனையான சந்தேகங்கள் அனந்தமுண்டு. ஆனாலும் நம்ம அல்ப்ப புத்திக்கு எட்டினவரையில் கேட்டுக்கொள்வதாவது:—

அவர்கள் என்னசொல்லுகிறார்களென்றால் ஜெகத்திலுள்ள ஜனங்கள் ஒருவர்க்கொருவர் ஜாதிபேத வேற்றுமையினாலேயே கருணை அற்றவர்களாயும், ஒருவர்க்கொருவர் உதவிபுரியாதவர்களாயும், அன்னியோன்னிய ஐக்கிய பத்தியமில்லாதவர்களாயும் ஒருவர்க்கொருவர் சத்துருக்களாயு மிருப்பதற்குக் காரணமேயன்றி வேறில்லை என்று தெரிந்துக்கொண்டு இவைகளுக்கெல்லாம் மனோ உருவங்களான ஜீவர்கள் காரணமன்று என்று அநேக வேதசாஸ்திர புராணங்களாலும், சட்டங்களாலும் கண்டு பிடித்து ஜெகத்திலுண்டாயிருக்கும் சகல ஜாதி ஜென்மங்களையும், பேதமில்லாமல் ஒன்று செய்துவிடலாமாகவும் அப்போதுதான் உலகெல்லாம் அல்லது தேசங்களெல்லாம் ஒன்றாய் அன்னியோன்னிய ஐக்கிய பத்தியமாயும், ஒருவர்க்கொருவர் உதவிபுரிந்துகொண்டும், சத்துருக்களாயிராமல் மித்திரர்களாய் இருக்கலாமென்றும் யோசித்து தெரிந்துக்கொண்டு வெளிவந்திருக்கிறார்களல்லவா?

இப்படிக்கானால் சகல நன்மை தீமைகளுக்கும், சகலஜனங்களுடைய ஐக்கிய பத்தியங்களுக்குகும், எல்லா ஜாதி ஜென்மங்கள் ஒன்றாயிருப்பதே காரணாதிஷ்டானமானால் ஆதியில் தேவரால் ஜாதி ஜென்மங்களின் பேதமன்றியில் ஒன்றாயே படைக்காமல் பலவாய் படைத்ததற்கு காரணமும் (1)

அப்படிக்கு சிருஷ்டியான பின்பாவது அப்படிக்காக ஒன்றாயிராமல் [illegible] இவ்விரண்டும் அதிகதிகமாய்ப் பலிசி பெரிகிக் கொண்டு வரும் காரணமும் (2)

இவைகள் அந்தந்த பீஜபரம் பரையாயே (சுக்கில சுரோணித பீஜபரம்பரையாயே ரக்த மாம்ஸ சரீர பரம்பரையாயே) ஜனித்து வந்துக்கொண்டிருக்கும் காரணமும் (3)

அப்படி ஜனித்துக்கொண்டுவரும் ஜாது ஜென்மங்களே நித்தியமாயிருமல் அணுவகளாலுண்டாகும் பீஜங்களின் வழியாயே அநேக சந்ததி உண்டாய்க்கொண்டு வருவதற்கு காரணமும் (4)

மரித்த மாம்ஸ உருவங்களே மறுபடி பிறவாமல்போன காரணமும் (5)

ஒரு ஜாதி பீஜத்திலிருந்து மற்றொரு ஜாதி ஜென்மங்கள் உதிப்பதுண்டா என்பதும் (6)

சஜாதிகளுக்குள்ளவே விஜாதி ஜென்ம பேதங்கள் உண்டா இல்லையா என்பதும் (7)

ஜாதி ஜென்மங்களை ஒன்று சேர்க்கவோ அல்லது பிரிக்கவோ மாம்ஸ உருவங்களான ஜென்மங்களின் காரியமா? மறு உருவமான ஜீவர்களின் காரியமா? (8)

ஜகத்தின் சகல காரண காரியங்களுக்கும் ஜீவ ரசாள் காரணமா ஜெகத் ஜென்ம ஜாதிகள் காரணமா என்பதுவும் (9)

ஜீவேஸ்வரருக்கு அறிவுண்டா? ஜகத் ஜன்ம ஜாதிகளுக்கு அறிவுண்டா? (10)

௪

அறிவாகிற சேதனங்களை உடைய ஜீவேஸ்வரர்களால் ஜெகத் ஜென்மஜாத ஜாதிகளுண்டாயிற்று? ஜடமான ஜகத் ஜென்ம ஜாத ஜாதிகளால் ஜீவேஸ்வரர்களுண்டானார்களா? (11)

ஜகத் ஜென்ம ஜாதிகளை பேதமில்லாமல் ஒன்றாய் சேர்ப்பது ஜாதி ஜென்மங்களாலேயா? ஜீவேஸ்வரர்களாலேயா (12)

நீங்கள் ஜீவர்களா? ஈசர்களா? ஜாதி ஜென்மங்களா? (13)

ஜீவேஸ்வரர்கள் ஜகத் ஜென்ம ஜாத ஜாதிகளின் பரம்பரையான பீஜவழியாகவே ஜனித்துக்கொண்டு வரும் ஜன்ம ஜாதி சரீரங்களை அடைவதுண்டா? ஜகத் ஜன்ம ஜாதிகளாகவே பிறப்பதுண்டா (14)

ஆதியில் தேவன் படைத்தபடிக்கே அந்தந்த ஜாதி ஜென்ம பீஜபரம்பரையாயே ஜன்ம ஜாதிகளுண்டாங்கொண்டு வந்துக் கொண்ருக்க அந்தந்த பீடிஜங்கள் மாறாமல் ஜென்மங்களும் ஜென்மங்கள் மாறாமல் பீஜங்களும் மாறுவதுண்டா? விதை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமோ என்ற பழமொழி உண்டல்லவா? (15)

நித்தியப்பொருள் நித்தியமாயும் அனித்தியப்பொருள் அனித்தியமாயும் இருப்பதுண்டா? நித்தியப்பொருள் அனித்தியமாயும் அனித்தியப்பொருள் நித்தியமாயும் இருப்பதுண்டா? (16)

பிறப்பு இறப்புகளோடே கூடிக்கொண்டிருப்பது ஜன்ம ஜாதிகளா ஜீவஸ்வரூக்களா (17)

புண்ணிய பாப சுக துக்கங்கள் முதலானதுகளும் ஜனன மரணாதிகளும் ஜீவர்களுக்குண்டா; ஜென்மங்களுக்குண்டா? (18)

ஆசாபாச காம குரோத சத்துரு மித்திரகாருண்ணிய ஐக்கிய பத்தியம் முதலானதும் சகல புண்ணிய பாவங்களை புரிவதும் அந்தந்தவினையின் பயன்களை அனுபவிப்பதும் உயிர்களா? உடல்களா? (19)

உயிர்களுக்கென்றால் உயிர்கள் அருவம் உடல்களுக்கென்றால் நித்திரை மூர்ச்சை மரணங்களில் உடல்களிருக்கின்றன. அப்போது அவ்வுடல்கள் யாதொன்றும் புரிவதுமில்லை. அனுபவிப்பதுமில்லை யாதொன்றும் பேசுவதுமில்லை. இப்படியிருக்க இவைகளெல்லாம் செய்தது யார்? அனுபவிப்பது யார்? இறந்த உடல் பிறப்பதுமில்லை, மறுபடி மரிப்பதுமில்லை. பிறப்பு இறப்பு யாருக்கு வந்தது (20)

இப்படிக்கெல்லாமிருப்பதில்தான் யாரென்று விசாரித்து உணராமல் உதித்து உதித்து ஒடுங்குகின்ற ஜெடங்களான ஜன்ம ஜாதி உருவங்களான மாம்ஸங்களே தாங்களென்றும் இந்த ஜடா ஜென்மங்களெல்லாம் ஒன்றாய்விட்டால் எல்லோரும் ஒன்றாய் ஐக்கிய பத்தியமாய் நிதநியமாய் வாழலாமென்றும் உலகத்தார்களுக்கெல்லாம் போதிக்க வந்தது எந்த கதியை அடையவோ அவைகளைச் சொல்லவேண்டும். (2 )

தங்கள் தங்கள் சொரூபமின்னதென்றே உணராததாலும், உடலே தாங்களென்றால் மரித்த உடல் மறுபடி பிரவாமலிருக்கவும் பிறப்பு, இறப்பு, பிரசித்தமாயும், பிரத்தியக்ஷமாயுமிருக்கவும், உடல் இறந்த போதும் உடல் இருந்தபோதும் யார் மாதாபிதாக்களாயிருக்கிறார்களோ அவர்களே மாதா பிதாக்களாயிருக்கவும், உலகத்தோரெல்லோரும் அந்தந்த மாதாபிதாக்களின் புத்திரர்களே அவர்களின் தந்தை தாய்களின் சரீரங்கள் மரித்து அச்சரீரமிருக்கும்போதே உங்களுடைய மாதாபிதாக்கள் உடலைவிட்டு வெளிப்பட்டுபோன ஆவியானஉயிரை உத்தேசித்தே உங்களுடைய மாதாபிதாக்கள் போய்விட்டார்களா என்று கேட்பதும் போய்விட்டார்களென்று மக்கள்கள் சொல்வதும் உண்டா? இல்லையா அப்போது கிடக்கும் பிரேதம் மாதா பிதாக்களா? போனவர்கள் மாதா பிதாக்களா? (22)

இவைகளினால் என்ன ஏற்படுகிறதென்றால் மாம்ஸ சரீரங் உண்டாக உபாதான காரணம் மாதா பிதாக்களின் மாம்ஸ சரீரங்களென்றும் அவர்கள்தான் மனுஷிய குமாரர்களென்றும் மனப் பிராணிகளான சூக்ஷ்ம சரீரத்தை அடைந்த ஜீவாத்மாக்களுக்கு அச்சரீரங்கள் உண்டாக உபாதான காரணம தேஜோ உருவாளான தேவர்களானதால் தேவ குமாரர்களென்றும் கி. மா. சொல்லப்படுகிறது. இவைகளில் நீங்கள் தேவகுமாரர்களா? மனுஷிய குமாரர்களா? (23)

மனுஷிய குமாரர்களென்றால் மாம்ஸ உருவமே நானென்று அபிமானித்த தேகாத்ம புத்தி உடையோர்கள். தேவ குமாரர்க

ளென்றால் மன்ப்பிருணேந்திரியங்களோடே கூடிய ஜீவாத்ம சொரூ பாள். (24)

பரமாத்ம சொரூபாள் யாரென்றால் அகண்டாத்ம சொரூப்மான உள்ளும் புறம்பும் எங்கும் நிறைந்த கடவுளென்கிற சச்சிதானந்த சொரூபாள் இவர்களில் நீங்கள் எந்த ஸ்வரூபாள் (25)

பரமாத்மா யாரென்றால் மனப்பிராணேந்திரியங்களோடே கூடிய பிரகிருதி விமுக்தாத்ம சொரூபாள் சுத்த ஆத்ம சுருபாள்

இவர்களில் மாம்ஸ ஸ்தூல தேகாத்மபுத்தி உடையவர்கள் இருளுருவாளென்றும் ஜீவாத்ம புத்தி உடையோர்கள் மருளுருவாளென்றும் குபரமாத்ம புத்தி உடையோர்கள் பிரணவஉருவாளென்றும் பருத்ப ஸ்வரூபாள் அருளுருவாளென்றும் சொல்லப்படும். இவர்களில் நீங்கள் எந்த ஸ்வரூபாளை அடைந்தவர்களோ அவைகளை யோசித்துச் சொல்ல வேண்டும்.

இவர்களில் இருளுருவாள் யார்? மருஉருவாள்யார்? பிரணவ உருவாள் யார்? அருளுருவாள் யார்? இருளுருவாள்யார் எனில் ஜகத்தானது ஒன்றுக்கொன்று பேதாபேதங்களாகவே பிரத்தியக்ஷமாய் விளங்கிக்கொண்டிருக்க இவைகளில் பகுத்தறிவில்லாமல் எல்லா ஜாதி ஜென்ம வஸ்துக்களையும் வெவ்வேறாய் பார்த்துக்கொண்டிருந்தும் எல்லா மாம்ஸ உருவங்களும் ஒன்றே என்று சொல்லுபவர்கள் மருளுருவாள் யாரெனில் மனம் போனபடிக்கெல்லாம் கிரியைகளை செய்துக்கொண்டு அலைபவர்கள். பிரணவ உருவாள் யாரேனில் மனத்தோடும் அறிவோடும் கூடிக்கொண்டும் இவ்விரண்டின் மத்தியில் இருப்பவர்கள். அருளுருவாளாரெனில் எங்கும் நிறைவாகாரமாயே இருந்துக்கொண்டு உலகு, உயிர், பரம், என்கிற தோற்றமுடித்து அவ்வருள் ஒளியாகவே எங்கும் நிறைந்து இருப்பவர்கள்.

இவைகளில் நீங்களெந்த உருவாள் அவைகளைச் சொல்லவேண்டும் ஜாதி ஜென்ம பேத பிருந்தி அத்தவர்களுக்கு ஜெகத் ஜாதி வஸ்துக்ளின் பேத பிருந்தி உண்டா? இல்லையா?

அல்லது ஒரே ஜாதிக்கித்தானில்லையா?

ஜாதி பேதம் இல்லையென்பது பிரத்தியக்ஷ பிரமாணமா? வேதசாஸ்திரபிரமாணமா? சட்ட பிரமாணமா?

ஞான மார்க்கமும் பக்தி மார்க்கமும்

உபாசரா மார்க்கமும் சகல ஜாதிகளுக்கும்

போது என்பது.

---

சிருஷ்டி ஸ்திதிலயம் அநுக்கிரகா நிக்ரகம் இவைகளெல்லா முடைய தேவரிஷி யோகீஸ்வர அஷ்டமாசித்தி நவமாநிதிகளென்ன, வோகாந்த்ர கமனமென்ன, பரகாய பிரவேசமென்ன, சாபானுக் கிரகவல்லமை என்ன. இவைகளை எல்லாம் அடைந்திருந்த எஜ்ஜாதியோர்களிலும் இப்படிக்கான மகிமையை அடைந்திருந்தார்களே தவிர ஜாதிகளை மாற்றிக் கொண்டு இருந்ததாய் தெரிகிறதில்லை. எப்படிக்கெனில் முன்னோர்களாயிருந்த வசிஷ்டசையம்மி, ஜனக, துலாதார தர்மவியாத இவர்களும் இப்புரம் தாண்ட குலஸ்தர்களான பட்டணசதுப் பிள்ளை தாயுமானவர் சிவ வாக்கியர் ஞானவெட்டி நந்நுனர் முதலான இவர்களெல்லோரும் பக்தி, ஞான, வைராக்கியத்துடனிருந்தும் அவரவர்களின் ஜாதி ஜென்ம, குலத்துக்குரிய, கர்மதர்மங்களைச் செய்துக்கொண்டு குலாசாரங்களுக்குரிய தொழில்களையே செய்துக்கொண்டு அதினாலேயே ஜீவித்

துக்கொண்டு வந்ததாயும் புராணங்களில் சொல்லுகிறதே தவிர ஜாதி, ஜென்ம, குலாசாரங்களை மாற்றிக்கொண்டு ஒரே ஜாதிகுலாசாரங்களை நடத்தி வந்ததாக சொல்லப்படவில்லை கிறிஸ்து மார்க்கத்திலும் ஈயேஸ்யோவான் முதலானோர்கள் அநேக மாகாத்மியங்களை உடைத்தானவர்களாயிருந்தும் அவர்களாவது ஜாதி, குல, மதத்தை கைவிட்டு இருந்ததாயும் தெரியவருகிறதில்லை.

ஜாதி பேதமில்லையானால் ஜாதிபேதம் ஜென்மங்களுக்கில்லையா? ஜீவர்களுக்கில்லையா, ஈசர்களுக்கில்லையா,

ஜாதிபேதமில்லையானால் பேதமில்லா ஜாதியும் பேதமில்லா ஜென்மமுண்டோ.

ஜாதிகள் வேறு ஜென்மங்கள் வேறு இரண்டும் ஒன்று,

ஜாதியும் ஜென்மமும் ஒன்றாயிருக்க ஜாதிபேதமாத்திரமுண்டோ ஜென்மங்களும் ஜாதியைப்போலிருமல் பலவாயிருக்கலாமோ,

ஜாதியென்ற நாமம் ஒரு ஜென்ம பொருளை பற்றியதா? பல ஜென்ம பொருளை பத்தியதா?

ஜாதி பேதப்பட்டது இரண்டுமில்லாமல் ஒன்றாயிருக்கும்போதா? ஜன்மங்கள் வேறுபட்டபோதா,

ஜகத், ஜென்ம, ஜாத, ஜாதி, வஸ்துக்கள் எல்லாம் ஒன்றுபட்ட போது ஜாதியும் ஜாதி பேதமுமில்லையா இவைகளெல்லாம் பேதமயிருக்கும்போது ஜாதிபேதமில்லையா,

ஜகத்ஜீவபரங்களிருக்கும்போதே ஜாதி ஜென்ம பேதங்களில்லாமல் போவதுண்டா.

ஜகத்தோர்களில் யானுவது ஒருமனிதன் எனக்கு யாதொரு ஜாதி, ஜாத, ஜென்ம குலங்களுமில்லை. தந்தை தாய், பெண்டீர் மக்கள் பொருள் முதலான துக்கமுமில்லை என்று சொல்வாருமுண்டோ,

ஜகத்திலுள்ள மனிதர்களில் எந்த நீசனானாலும்கூட ஜாதி ஜென்ம தக்ஷை தாயின்றுமென்பதை ஒவ்வாதவர்களுமுண்டோ

---

# இடம் ஏவல் பொருள்.

ஜகத்தில் உதித்த சகல ஜீவகோடிகளுக்கும் இடம், ஏவல் பொருள் இன்பம் என 4-வகையுண்டு. இப்படிக்கில்லாத ஜந்துக்களே இல்லை என்பது சத்தியம்.

எப்படிக்கெனில் உயிர்களிக்கும் இடம் சூக்ஷ்ம உடல் அச்சூக்ஷ்ம உடல் வசிக்குமிடம் ஸ்தூல உடல் இந்த உயிர்களும் உடல்களும்வசிக்குமிடம் உலகு இவைகள் ஒன்றைவிட்டு ஒன்று இருந்த எப்படிக்கெனில் இருப்பிடமன்றி இருக்கும் வஸ்துக்களுமுண்டோ, (அதிஷ்டானமன்றி ஆரோபமில்லை என்ன சத்தியம்) இப்படிக்கே ஸ்தூல உடலுக்கு இருப்பிடம் சூக்ஷ்ம உடல்

சூக்ஷ்ம உடலுக்கு இருப்பிடம் உயிர்

உயிர்களுக்கிருப்பிடம் கடவுள்

உயிர்கள் வந்த இடமாகிய கடவுளை அடையும் வரையில் உயர்வு தாழ்வான உடல்களை அடைவதில் ஐயமில்லை. அந்தந்த ஜாதி ஜென்ம ஜாத குலங்களுக்கு கணக்கில்லை. அவைகள் பீஜ பரம்பரையாயே ஜனித்து வந்துகொண்டேயிருக்கிறது,

1. ஜாதி என்பது ஜன்ம சங்காத சமுஷ்டியான பன்மைச்சொல்லா? வியஷ்டியான ஒருமைச் சொல்லா, ஒருமைக்கு பேதமில்லையா பன்மைக்கு பேதமில்லையா? உலகத்தில் பேதமில்லாத ஜெகத், ஜென்ம, ஜாத ஜாதி வஸ்துக்களுமுண்டோ? அதுகள் எது? ஜெகத் ஜாதி பேதமில்லாதபோது பேதமில்லாத ஜென்ம ஜாதிகளும் உண்டோ? ஜென்ம ஜாதிகளில்லா ஜெகத்துக்களு முண்டோ? பேதங்களுக்கு அபேதமும் உண்டோ ஜாதிக்கு உருவ் நாமமுண்டா? ஜென்மங்களுக்கு உருவ நாமமும் உண்டா, பேதா பேதங்களுக்கு உருவம் காரணமா அருவம் காரணமா, உலகத்தில் நாம ரூபங்களான ஜெகத், ஜென்ம, ஜாத. ஜாதி வஸ்துக்களான படைப்புகளையும் தேச கால கர்ம வஸ்துக்களின் படைப்புக்களையும், பேத, பேதங்களாக பிரித்தவர் கடவுளா, மனிதர்களா, தெய்வப் படைப்பை மனிதர்களால் மாற்றுவது எவ்வண்ணம், நாம, ரூப, பேத தோற்றமுடையது ஜெகத், ஜென்ம, ஜாதி, ஜாதங்களா நாம,ரூப பேததோற்றமற்றது ஜகத் ஜன்ம ஜாதி ஜாதங்களா் நாமரூப ஜாதி ஜென்மங்களின் பகுத்தறிவே இல்லாதவர்களுக்கு ஜகத் ஜீவேஸ்வரளுடைய பகுத்தறிவும் ஒரே கடவுளான தேவரிடமிருந்து உண்டான உயிர்களும் ஒன்றுயே இருக்கவும் மாயிக உலகம் வேறுகவே இருக்கவும், ஒரு பீஜத்திலுண்டான விருக்ஷமும் ஒன்றுயே இருக்கவும், பீஜங்களைப்போலாயுள்ள ஒன்றுன ஜீவர்களும், விருக்ஷங்களை போலுள்ள ஜென்ம ஜாதிகளும் அனந்தமாய்ஜனித்து பலிகிப்பெருகிக் கொண்டு வருவதும் தெய்வச் செயலா, மனிதச் செயலா, தெய்வப் படைப்பை மாற்ற வல்லமை மனிதர்களுக்குண்டா.

2. ஜாதிபேதமத்த தேசமெது, ஜென்ம, ஜாத, வஸ்துக்களெது இவைகள் எப்படிக்காணுல் ஒன்றுகலாம் அவைகளையும் சொல்லவேண்டும். ஜாதிபேதமில்லாமை உயிருக்கா, உடலுக்கா, ஜென்மத்தால் வந்த ஜாதி ஜென்மங்கள் மரணத்தாலன்றி வேறுவிதமாய் மாறுதலுண்டோ. இப்படிக்கு ஜாதிகள் ஜென்மங்களை விட்டும் ஜென்மங்கள் ஜாதிகளை விட்டும். பிரியக்கூடாததாயிருக்க ஜாதிமாத்திரத்தில் பேதமில்லையென்று

சொல்வதுஎப்படி ஜாதி பேதமத்தபொது ஜென்மபேதமும் இல்லை ஜென்ம பேதமத்தபோது ஜாதிபேதமில்லை என்பது திண்ணம். ஜாதிபேதமில்லை என்றால் பேதமுடையது ஜாதிஜெகத்தா, பேதமத்தது ஜாதி ஜெகத்தா கடவுளாலுண்டான ஜெகத், ஜன்ம, ஜாத ஜாதி, வஸ்துக்கள் சிருஷ்டிகாலம்துடர்ந்துநாளதுவரையில் தெய்வபடைப்பின்படிக்கே விருக்ஷபீஜமியாயப்போல் அந்தந்த ஜெனம ஜாத, ஜாதிபீஜபரம்பரையாயே அந்தந்த ஜன்ம, ஜாதிகளாய் உண்டாய் பலிகி, பெருகிக்கொண்டே வருவதாயிருக்க இப்படிக்கான தெய்வ படைப்புடைய அந்தந்த ஜாதி, ஜென்மங்களை மனித பிரப்பானவர்கள் எந்தவகையில் பேதமில்லா எந்த ஒன்றான ஜாதியாக ஒன்றாய் செய்து போடுவதோ அதையும்சொல்லவேண்டும். ஒவ்வொருமனிதாகளுக்குண்டாய்க்கொண்டுவரும் வாலியமென்ன பருவமென்ன. கிழத்தன மென்ன, நிரை திரை விகாரங்களென்ன; ஜனன மரணங்களென்ன, இவைகளில் எதையாவது ஒன்றை மாற்றிக் கொள்ள வல்லமையுண்டா?

---

# தெய்வ படைப்பு இன்னதென்பது.

---

3. ஜெகத்திலுண்டாய்க்கொண்டுவரும் ஜீவகோடிகளுடைய அஞாத்திய வித்தியாவித்தையாலுண்டான ஜெனம, கர்ம, புண்ணிய, பாப, வாஸனையினாலுண்டான வினையின்படி ஜீவர்களுடைய சுகதுக்கானுபவங்களுக்காகவே, கடவுளால் இஜ்ஜெகத்தையும், தேச, கால, கர்ம ஜென்ம வஸ்துக்களையும் படைத்தாரேயன்றி வேறுவிதத்திற்காகவல்ல வேறு விதத்திற்காக படைத்தாரென்றால் அதைச் சொல்லவும். இப்படிக்கான சர்வ வல்லமையுள்ள கடவுளின் ஆக்ஞா சக்கரத்தின்படி சகல ஜாத, ஜாதி ஜென்ம, வஸ்துக்கள் உண்டாகிறதேயன்றி மனிதர்களுடைய ஆக்ஞா சக்கரத்தின்படி ஜெகத்தாவது, ஜென்மங்களாவது

ஜாதி வஸ்துக்களாவது, கால, கர்மங்களாவது உண்டாகவில்லை என்பது திண்ணம். ஞ. மா. யோவான் 6-ல் 63-யும் கோரிந்தியன் 8-ல் 4, 5, 6, 7 -யும் பார்க்க.

---

## அரசாக்ஞை.

4. இப்படிக்கு கடவுளால் படைக்கப்பட்ட ஜெகத் ஜென்ம ஜாத ஜாதி வஸ்துக்களைக்கொண்டே சிருஷ்டிகாலம் துடர்ந்து இவ்விந்தியாவிலுண்டான சகல பிரஜைகளும் அரசர்களும் அந்தந்த ஜென்மங்களாலுண்டான அந்தந்த ஜாதி ஜென்ம ஜாத குலத்தோர்களுக்கு அந்ததேவராலேயே ஏற்பட்டிருக்கும் தேவ சுவாஸ உருவமான வேத சாஸ்திர விதியை அனுசரித்து நூன்றுண்ட அந்தந்த அரசர்களும் அந்தந்த ஜாதி ஜென்ம குலத்தோர்களும் அந்தந்த குலத்துக்குரிய கர்ம தர்மங்களையும் தொழில்களையும் செய்து அதனால் ஜீவித்துக்கொண்டு வந்தார்கள் அப்போதிருந்த இந்திய அரசர்களுடைய ஆக்ஞையும் அந்த அரசர்களுடைய ஆக்ஞையின்படிக்கே பிரஜைகளுமாயிருந்ததால் இவ்விந்தியவிவஸ்தையுடனும் அமரிக்கையுடனும், இகபரகதிகளுக்கு ஸாதகங்களுடனும் அநேக காலமாயிருந்து வாழ்ந்துக்கொண்டிருந்தது இப்போது அப்படிக்கில்லாமல் அரசர்கள் அன்னிய தேசத்தார்களாகவும் அப்படிக்கான தெய்வ ஆக்ஞைகளான வேத சாஸ்திரங்களையும் கைவிட்டு மனிதர்களுடைய மனம் போனபடி சட்டங்களை ஏற்படுத்திக்கொண்டு ராஜீகத்தை நடத்திவருவதால் ஜெகத். ஜென்ம, ஜாதஜாதி, குலகோத்திர விவஸ்தைகளுமத்து உயர்வு தாழ்வுகளுமத்து சிறியோர் பெரியோர்களென்கிற விவஸ்தைகளுமத்து, அரசர்களுக்குரியவும், பிரஜைகளுக்குரியவுமான விவஸ்தைகளுமத்து ஜீவகாருண்ணியமும் அத்து ஜீவசம்பாவனையுமத்து மாம்ஸ உருவங்களான ஜென்மங்களிடத்தில் சம்பாஷணையுண்

டாய் ஜென்மங்களே சகல கர்ம தர்மங்களையும், சகல தொழில்களையும் செய்கிறதென்கிற பாவனை உண்டாய் மனித ஜாதி, ஜென்ம, குலகோத்திரங்களெல்லாம் ஒன்றே என்றும் மாம்ஸங்களெல்லாம் ஒன்றேயே அபேத பாவனையுண்டாயிருப்பதே ஜகத்துக்குண்டான பீடைகளையன்றி, வேறு வித்தாலன்று இவைகள் ஜீவகாருண்ணியமுமன்று இப்படிக்கான அனுசாரத்தால் உண்டாய்க்கொண்டு வருவதே தொத்து வியாதிகளென்றறிக. (பிளேக் நிவாரண புஸ்தககதைப் பார்க்க.)

# தொத்து வியாதி சம்பவத்தின் காரணம்.

5. இவ்விந்தியாவானது அநேக காலங்களாய் ஜாதி, குல, கோத்திரவம்ஸ பரம்பரையாயே தேவரால்சிருஷ்டித்தப்படி அவரவர்களுக்குரிய ஜாதிகுல வர்ணாசிரம தர்மத்துடனும, விவஸ்தைகளுடனும், அமரிக்கையுடனும் இருந்தமையால் அதுவரையில் இப்படிக்கான தொத்து வியாதிகள் முதலான யாதொரு பீடைகளும் அனுகாமலிருந்தது. இவ்விந்தியாவை இப்போது ஆளும் அரசர்கள் இக்கால கதியை அனுசரித்து வேற்றுமையான ஜாதி. குல, கோத்திர வம்ஸஸ்தர்களுடைய ஆளுகையில் அகப்பட்டுக்கொண்டபடியால் இப்போதிந்த ராஜ்ஜியத்தில் அப்படிக்கான யாதொரு ஆசார விவஸ்தைகள் அத்துப்போனதினால், சீர்கெட்டு உபாதிக்கு உள்ளானார்கள். எப்படிக்கெனில் எல்லா ஜாதிகளும் ஜென்மங்களும் ஆசாரங்களும், கர்மங்களும் ஜாதிகுல, விவஸ்தையன்றி எல்லா ஜனங்களும், எல்லா கல்விகளும் எல்லோரும் கற்றுக்கொண்டு எல்லோரும் எல்லா தொழில்களும் செய்யலாமென்றும் எல்லோரும் எல்லா அதிகாரங்களையும் நடத்தலாமென்றும அரசர்களாகவும் ஆகலாமென்றும், எல்லோரும் ஒரேவிதமான உணவுகளான உண்பன, உடுப்பன, படிப்பன, குடிப்பன, குடுப்பன, படுப்பன், பெருவன வகைகளிலும் ஒன்றுயே இருக்கலாமென்றும் சாஸ்திர பிரமாணங்களில்லாத

சட்டதிட்டங்கள்எற்பட்டும்போயிருப்பதனுல்இவ்விந்தியாஇப்படிக்கான ஆதி வியாதியில் பிரஜைகள் பீடிக்கப்பட்டார்கள். இப்படிக்கான பிரப்பினுல் தெய்வ கயாகிலுண்டான ஜெகத், ஜென்ம, ஜாதிகள், விவஸ்தை அத்து இந்தியா சீர்கெட்டுப்போனுலும், ராஜரீகாதிகாரங்களில் மாத்திரம் எல்லோரும் அதிகார வறம்பில் உயர்வுதாழ்வான வியவஸ்தைகளோடு இருக்கவேணுமென்றும், அந்தந்த அதிகார விதியின்படியே நடக்கவேணுமாய் சட்டங்களின் விதி, விலக்கு ஏற்ப்பட்டுப் போனதினுல் இப்படிக்கு சீர்கெட இடம் உண்டாயிற்றென்று அறிவீர்களாக ராஜ விதியின்படி நடவா விடில் ஜீவிக்க வழியில்லை. மாம்ஸ தேகங்களுக்குரிய ஆசார விவஸ்தைகள் அத்துப்போயிருப்பவர்களுக்கு தேக பீடை விடுவதில்லை மாம்ஸ தேகங்களுக்குரிய மனே சுத்தி ஆகும் வரையில ஜீவர்களுக குண்டாகிய பீடைகள் அருவதிலலையென்பது உறுதியாய் நம்புவீர்களாக கி. ம யோபு அதிகாரம் 14-ல் 22-ல் மாம்ஸ சரீரம உள்ளளவும் நோவுமிருக்குமென்றும் அத்தேகதித்ல் ஆத்மா உள்ளளவும் துக்கமும் உணடென்பதை பார்ப்பீர்களாக. எந்தமனிதர்களாலும எதாவது ஒரு ஜாதி குல மதங்களை அனுசரித்திருக்கவேணுமாய் எம்மார்க்கமும் சொல்லுமேயன்றி யாதொரு ஜாதி, குல, பேதமில்லாமல் சொல்ல வந்து சுதற்மாகளை கைவிடச் செய்த அரசனுக்கு ஆண்டவனே கதியல்லவா.

---

## சிருஷ்டி காலம் துடர்ந்து ஜென்ம, ஜாத, ஜாதிகள்,

# வேருய் மாறவில்லை என்பது.

6. சிருஷ்டி காலம் துடர்ந்து நாளது வரையில் எந்தந்த ஜாதி ஜென்ம குல வஸ்துக்களோ அந்தந்த ஜாதி ஜென்மகுல வஸ்துக்கள்

பீஜ பரம்பரையாகவே வம்ஸ பாரம்பரையாய் ஜாதி ஜன்மங்கள் ஜனித்துக்கொண்டு வருகிறதேயன்றி இவைகளில் ஒன்றாவது மனிதர்களால் இதுவரையில் மாற்றப்படவில்லையென்பது ஸத்தியம். மனிதர்களை விடமற்ற எந்த ஜாதியும் அவைஅவைகளின் கர்ம தர்மங்களை கைவிடவில்லை. என்பது ஸத்ஜியம். ஜெகத்தில் ஜனித்துக்கொண்டுவரும் நாமரூபங்களையுடைய சகல வஸ்துக்களும், மரித்துக்கொண்டே வருவதை சகல ஜனங்களும் பார்த்துக்கொண்டிருக்கிறார்களல்லவா. அப்படிக்கிருந்தும் நம்ம கதிகளும் இப்படிக்குத்தானென்றுணராமல் மாம்ஸ உருவங்களானதுகளே ஆத்மாவான தானென்றுணர்ந்தும் இப்படிக்கான தாங்களான மனித சரீரங்கள் மரிப்பதில்லை என்றும் இப்படிக்கே நித்தியமாய் இருக்கப்போகிறோமென்றும் இந்த மாம்ஸ உருவங்க[illegible] சகல போகங்களையும் அனுபவிக்கிறதென்றும் இது மரிப்பதேமோக்ஷமென்று நினைத்துக்கொண்டிருக்கும் இருளுருவமான புத்தியை உடையோர்களுக்கு இருளுருவமான இந்த ராஜ்ஜியத்தில் வேறுகதிதானுண்டோ?

மனிதர்கள் தரிக்கும் உடைகளைப்போல்
உயிர்கள் தரிக்கும் உடல்கள் என்பது

7. உடல்கள் வசிக்கும் வீடுகளைப்போல் உயிர்கள் வசிக்கும் வீடுகள் ஸ்தூல உடல்களாயும், உடல்கள் தரிக்கும் உடுப்புகளைப்போல் உயிர்கள் தரிக்கும் உடுப்புகள் சூக்ஷ்மசரீரங்களாயும், ஸ்தூல உடல்கள் வசித்திருந்த கிருமங்களையும், கிரகங்களையும் விட்டு வேறு கிருமங்களுக்கும். கிரகங்களுக்கும் போகும்போது முன்புதான் வசித்திருந்த, கிரகங்களையும் கிருமங்களையும் விட்டுப்போவது போல் உயிர்கள்தான் வசித்திருக்கும் உடல்களை விட்டு வேறானலோகாந்தரங்களுக்குப் போகும்போது சூக்ஷ்மசரீரத்துடன் கூடவேபோகிறார்களென்று அறியத்தக்கது காரண உருவமான மண்ணிலிருந்து காரிய உருவமான பானை, சட்டி, குடங்கள் அம்மண்ணிலேயே உண்டாய் அம்மண்ணிலேயே ஒடுங்கிக்கொண்டு வருவதுபோல் மாயா மாம்ஸங்கள் அந்தந்த ஜாதி ஜன்ம

ங்களின் உருவங்களின்படி உடல்கள் உதித்து, உதித்து ஒடுங்கிக்கொண்டு வருகிறதென்று அறியத்தக்கது. இப்படிக்கு உதிப்பதும் ஒடுங்குவதும் உடல்களே அன்றி உயிர்களல்ல, உயிர்களுக்கு உதிப்பும் ஒடுங்குவதுமில்லை வினையின்படி உச்ச நீச்சர்களான உடல்களில் பிரவேசிப்பதும் விடுவதுமுண்டு இதைத்தான் அக்கியானிகள் உயிர்களே பிறக்கிறதென்றும் மரிக்கிறதென்றும் சொல்வார்கள் சொர்க்க நரக சுக துக்கங்கள் உயிர்களுக்கேயன்றி உடல்களுக்கல்ல இதை யோஜிப்பீர்களாக.

மனிதர்கள் தரித்துக்கொண்டிருக்கும் உடை உடுப்புகளையே வேறொரு உடை உடுப்புகளாக மாற்றிக் கொள்வாரும் உண்டே இப்படிக்கு உயிர்களுடைய வினையின்படி அந்தந்த உயிர்கள் உயர்வு தாழ்வான ஜென்மங்களை அடைந்து வந்துக்கொண்டிருக்கவும், அடைந்த ஜென்மங்களையே வேறு ஜென்மங்களாக மாற்றிக்கொள்வாருமுண்டோ? உலகத்தில் மனிதர்கள் தரிக்கும் உடைகளெல்லாம் உயர்வு தாழ்வில்லாமல் ஒரே விதமான உடுப்புக்களுமுண்டோ? இப்படிக்கு ஒவ்வொரு உயிர்களும் உயர்வு தாழ்வில்லாத ஒரே விதமான உடல்களை தரிப்பதில்லை என்பது திண்ணம் ஒவ்வொரு மனிதர்களும் தாங்கள் தரிக்கும் உடைகளையும், ஒவ்வொரு உயிர்களும் உயர்வான உடல்களைக் கோருவதேயன்றி இழிவான உடல்களைக் கோருவதுமில்லை என்பது திண்ணம்.

## முஜ்ஜென்ம கர்மங்களின்படி பிஜ்ஜென்மங்கள்

# உண்டென்பது

8 அது எப்படிக்கெனில் மனிதர்கள் முன் பயிரிட்ட பலனையே பின் அடைவது போலும், முன் செய்த தொழிலின் கூலியை பின்

பற்றுவது போலும் முன்ஜென்மங்களால் செய்த கர்மவினையின்படி பின்ஜென்மங்கள் தரிப்பதேயன்றி இச்ஜென்மங்களில் செய்யும் வினைகளின் பலனைக்கொண்டே இச்ஜென்மங்களை மாற்றிக்கொள்வதாவது இச்ஜென்மத்தில் தானே அனுபவிப்பதாவது உண்டோ? இவைகளையும் சொல்ல வேண்டும்.

### ஜெந்துக்குக் காரணமான பஞ்ச பூதங்களிலும் பேதம்

9. உலகங்களுக்கெல்லாம் காரணமான பூஜலாக்கினிவாயுகாசங்களுக்காவது இவைகளாலுண்டான பவுதிக, பூசர, கேசர, ஜலசரங்களான ஜெகத் ஜென்ம ஜாத வஸ்துக்களுக்காவது, அண்டஜ வேர்வைஜசுஜ்ஜருயுஜஉதவிஜ்ஜங்களுக்காவது ரஸநிரஸவர்க்கங்களுக்காவது இப்படிக்கான நாமரூபமுள்ள எந்த ஜெகத், ஜென்ம, வஸ்துக்களுக்கு பேதமில்லையோ அவைகளை சொல்லவும் காட்டவும் வேணடும்.

## பஞ்சபூத பேதங்கள்.

10. பூமிகளெல்லாம் ஒன்ருகவே இருக்க அதற்கு கண்டங்களென்றும், தேசங்களென்றும், பட்டணங்களென்றும், ராஜதானிகளென்றும் ஜில்லாக்களென்றும், கிருமங்களென்றும், இப்படிக்கு நாமருபங்களோடே கூடிய நாஞ விதமாய் பேதப்பட்டிருக்கக் காரணமென்ன? இப்படிக்கே ஒரே ஜலத்தில், சமுத்திர ஜலமென்றும், நதி ஜலமென்றும் ஏரி, குளம், குட்டை, கிணறு முதலான ஜலங்களென்றும் இப்படிக்கு நாஞவிதமாய் பிரிந்திருக்கக் காரணமென்ன? ஒரே அக்கினியில் சூரியாக்கினி என்றும் படபாக்கினி என்றும், ஜாடருக்கினி, வஞக்கினி, கிரகாக்கினிகளென்றும், இப்படிக்கு அநேக விதங்களாய் விளங்கக் காரணமென்ன? இப்படிக்கு ஒன்ருன வாயுக்கே அநேக விதமான வாயுக்களா

யும், மஹாகாஸம் ஒன்றாகவே இருக்க கடாகாஸ, மடாகாஸ, நேகர காஸ, கூடாகாஸ, குஸுலாகாஸங்களாய்ப் பிரிவதென்ன? இப்படிக்கு அநேக ஜங்கம, ஸ்தாவர வர்க்கங்களிலும் நிறைந்திருக்கும் பஞ்ச பூதங்கள் பேதப்பட்டிருக்க மாம்ஸ உருவங்களான சகல ஜென்ம ஜாதி பேத முண்டென்பதை ஒப்புக்கொண்டு மனித மாமஸங்களில் மாத்திரம் பேத மத்துப்போனதாய் சொல்வது எந்த பாகத்தில்? இவைகளெல்லாம் தேவருலேயே சிருஷ்டிகாலங்களில் தானே படைக்கப்பட்டிருக்க இவைகளில் மனித ஜாத ஜென்மங்களுக்கு மாத்திரம் பேதமில்லை என்று வெளி வந்தது எந்த பிரமாணத்தைக் கொண்டு? அதைச் சொல்ல வேண்டும்.

## சகல பேதங்களுமுடையதே ஜெகத்தேன்பது.

11. நீங்கள் தெய்வப்படைப்பு இன்னது மனித படைப்பு இன்ன தென்றாவது தெரிந்துக்கொண்டதாவதுண்டா? சகலமான ஜெகத், ஜென்ம, ஜாத, கருவிகரணங்களும் தெய்வபடைப்பா? மனித படைப்பா ஜாதி பேதமத்தவர்களுக்குச் சஜாதி விஜாதி பேதமுண்டா? சஜாதி விஜாதி, பேதமத்தவர்களுக்கு தெய்வ, மனுஷிய, மிருக பக்ஷி முதலான மாம்ஸ உருவபேதங்களுமுண்டோ? மனுஷிய பேதபாவனை அத்தவர்களுக்கு நான், நீ, அவன், இவன், அது, இது அவனது, இவனது, என்னுது, உன்னுது என்கிற பேதங்களுமுண்டோ? தந்தை, தாய், பெண்டிர், மக்கள், தனதான்ய, பசு, க்ஷேத்திர, கிரகாதி, பேதங்கள் தானுண்டோ? சகல பேதங்களுக்கும் மூல காரணமானது. ஜாதி, ஜாத ஜென்மங்களாகவே இருக்கவும் இவைகளுக்கெல்லாம் மூல காரணமான, ஜாதி ஜென்மங்களுக்கே பேதமத்தபோது இவைகளுக்காக உண்டான மற்ற எந்த வஸ்துக்களுக்கு பேதம் உண்டாகலாமோ அவைகளையும், சகல பேதங்களும் அத்தமேல் உலக விவகாரிகளாய் இந்த உலக விவகாரத்தையே செய்துக்கொண்டிருக்கலாமா? சகல விவகாரங்களும் கூடியதே உலகல்

லவா? பேத விவகாரிகள் உலகத்தோரா? அபேதவிவகாரிகள் துறவிகளா இவைகளைச் சொல்லவேண்டும். உலகத்தோர்களுக்கு துறவியும், துறவிகளுக்கு உலகமும் உண்டா? துறவிகளுக்கு உலகவிவகாரமும், உலகத்தோர்களுக்கு துறவும் உலகபேதமில்லை என்றும் எந்த சாஸ்திரசட்டங்களாவது சொல்வதுண்டா? துறவிகளுக்கு ஞானமார்க்கமும், உலகத்தோர்களுக்கு கர்ம மார்க்கமும் ஏற்பட்டிருக்க இவ்விரண்டு வழியுங் கெட்டு உலகமானது இருளை அடைந்து போவது தெய்வ கதி என்றும் கர்மகதி என்றும் ராஜ்யகதி யென்றும் தெரியவில்லை இவைகளையும் சொல்லவேண்டும். அதிகார அனதிகார பேதங்களுண்டா? எல்லாம் ஒன்று

## தெய்வ விவகாரம் சாஸ்திர தர்மமா சட்ட தர்மமா.

12. தெய்விகவிவகாரம் ஜெகத், ஜென்ம, ஜாத, ஜாதி வஸ்து முதலான உலகங்களை படைப்பிப்பதாகும் ஜீவர்களின் விவகாரம் இவைகளாலுண்டான விஸயங்களாகிற சுக துக்கங்களை அடைந்து அனுபவிப்பதாகும். தேகங்களுடைய படைப்பு, இவ்விரண்டுமில்லாத உடல் கருவிகளான ஜெடங்களாகும் இப்படிக்கான ஜெடங்களே ஜெகத் ஜென்மங்களென்று அறிவீர்களாக இப்படிக்கு ஜெகத் ஜீவேஸ்வராகளின் பேதங்களை பகுத்தறிவதே பகுத்தறிவு நீங்கள் சொல்லுகிறபடி பகுத்தறிவது பகுத்தறிவு அல்ல இவைகளை பகுத்துச் சொல்லுகின்ற வேத் சாஸ்திர புராணங்களைப்படித் துணர்ந்தவர்களாமோ; அவர்களாலேயே இவைகளின் தத்துவத்தை உணரக்கூடாதவர்களாயிருக்க இவைகளை படித்துணராத மூடர்கள் இவைகளை பிரசங்கிக்க வெளிவருவது எப்படி இருக்கிறதெனில் தென்திசைச் செல்லுபவன் வடதிசையின் சரித்திரங்களை பிரசங்கிப்பது போலாகிறதல்லவா?

13. அரசர்கள் முதல் நீசர்கள் வரையில் அநேக பேதங்களோடே கூடிய பேதவிவகாரிகளா? அபேத விவகாரிகளா? உலக விவகாரிகளுக்கு அபேதங்களாயிருக்க அதிகாரமுண்டா? எந்தெந்த ஜாதி, ஜென்ம வஸ்துக்களிலிருந்து எந்தெந்த ஜாதி, ஜென்ம வஸ்துக்கள் உதிக்கின்றதோ அது அந்தந்த ஜாதி ஜென்ம வஸ்துக்களாகவே விருக்ஷ பீஜநியாயம் போலே ஜனித்து வந்துகொண்டிருக்க இப்படிக்கான தெய்வகதியை மனிதர்கள் மாற்றிவிடுவது எவ்வண்ணம், ஒரு பீஜம் மற்றொரு பீஜமாய் மாறுவதுண்டா? இப்படிக்கான மனிதகல்பனையால் செய்துக்கொள்ளும் உடை உடுப்புகளையே வேறு உடுப்புகளாக மாற்றிக்கொள்ள வல்லமை அத்தவர்கள் தெய்வ கல்பனையாலுண்டான ஒரு உடல்களையே வேறு உடல்களாக மாற்றிக்கொள்ளும் வல்லமை மனிதர்களுக்குண்டாவது எப்படி?

## ஜனித்த உடலே பரிப்பதும் மரித்த உடல் ஜனியாதென்பதும்.

14. ஜனித்த உடல்மரிப்பதேயன்றி அதுவே, வேறாக மாறுவதாவது அதுவே மறுபடி பிறப்பதாவதுண்டா? மனிதர்களின் மனம் போனபடி மதங்களையும் மதத்துக்குரிய வேஷங்களையும் ஒரே தேகங்களில் தரிப்பதும் மாற்றியும் கொள்ளுகிறார்களேயன்றி மாறு வேஷம் தரித்த மாம்ஸ உருவங்களான தேகங்களையே மாற்றிக்கொள்வாருமுண்டோ மனிதர்களின் மனம் போனபடி நடக்க சாஸ்திர சட்டங்கள் ஏற்பட்டிருப்பதுண்டா? அப்படி நடவாமலிருக்கும்படி தடுக்க சட்ட சாஸ்திரம் ஏற்பட்டிருப்பதுண்டா, விவகாரங்கள் செய்வது மனமா, மாம்ஸமா எப்படிக்கானால் மாம்ஸ உருவங்களை வேறு உருவங்களாக மாற்றிக் கொள்ளலாமோ அதுகளையும் சொல்லவேண்டும்.

## உலகத்தில் சுஜாதி விஜாதிகளாக தேவன் படைத்தற்கு

# காரணம் எதற்கு.

15. தேவர் உலகத்தில் எதற்காக சஜாதி, விஜாதி பேதங்களாகவும், சுத்தபேதங்களாகவும் உயர்வு தாழ்வான ஜாதிக்கொன்ஞன ஜென்மங்களை ஆதியில் விரை முதலாக படைத்தாரோ அவைகளையும் சொல்வதன்றி மனிதர்களுக்கு ஜாதி ஜென்மங்களை மாற்றிக் கொள்ள் வல்லமை உண்டாய் இருக்கும்போது அவரவர்களுக்குண்டாகும் ஜனன மரணங்களையும், சுக துக்கங்களையும், துன்ப இன்பங்களையும், விருப்பு வெறுப்புகளையும், பசிதாகங்களையும் கஷ்ட நிஷ்டூரங்களையும் பேதம் இல்லாமல் ஒன்றாக செய்துக்கொள்ளாமல் இருப்பதென்ன ஜன்ம மிருத்தியூ ஜரா வியாதிகளிலும் பேதமில்லாமலே செய்ய வல்லமை உண்டா? நீங்கள் தொழில்களின் பேதங்களைப்பற்றி உண்டானது ஜாதி பேதங்களேயன்றி; ஜாதிபேதங்களைப்பற்றி வந்தது தொழில்களல்லவென்று சொல்லுகிறீர்களல்லவா? அப்படிக்கானல் ஜாதி ஜென்மங்களன்றி தொழில்களும் தொழில்களன்றி ஜாதி ஜென்மங்களும் எப்படிக்குண்டாகுமோ, அதையும் முன் உண்டானது ஜென்மங்களா? தொழில்களா என்பதையும் உயர்வுதாழ்வான ஜென்ம பேதங்கள் உண்டாக காரணம் என்னவென்பதையும், உயர்வுதாழ்வான வினைகளின் பேதங்களுக்குக் காரணம் உயர்வு தாழ்வான ஜென்மங்களுமாய் சிருஷ்டிக்கப்பட்டு அந்தக்காலம் துடர்ந்து நாளது வரையில் அந்தப்படிக்கே ஜீவர்களுக்கு ஜாதி ஜென்மங்கள் வந்துக்கொண்டிருக்கிறதை என்றியவில்லே ஜீவர்களுடைய வினையின்படி ஜென்மங்களை அடையும் பொருட்டே முன்னோர்ஜென்மங்களை தேவனுல் படைக்கப்பட்டிருப்பதேயன்றி மனிதர்களால் படைக்கப்பட்டதன்று இதை கி. மா, கோரிந்தியன் 46 பார்க்க.

16. (பீஜ வழியே ஜாதி ஜென்ம கர்மங்களுக்கு காரணம் அந்தந்த ஜாதி ஜென்மங்கள் அந்தந்த ஜாதி ஜென்மங்கள் அந்தந்த ஜாதி ஜென்ம பீஜவழியாகவே சிருஷ்டி காலமுதல் வம்ஸபாரம்பரையாய் வந்துக்கொண்டிருக்கவும் மனிதர்கள் செய்யும் புண்ணிய, பாப, கர்மவினையின்படிக்கே தொழில்கள் செய்துக்கொண்டு அவைகளினால் உயர்வு தாழ்வான ஜாதி ஜென்மங்களை ஜீவர்கள் அடைந்துக்கொண்டு வருவதாயிருக்கவும் இப்படிக்கானஎல்லா பாப புண்ணிய நன்மை தீமைகளுக்கும் அவரவர்களின் மனங்களே காரணமாயிருக்கவும் இவைகளுக்கெல்லாம் மாம்ஸங்கள்காரணமானது எவ்வண்ணம் இப்படிக்கு அனேகமான தேசங்களும் அனேகமான காலகர்மவஸ்து பேதங்களும், ஜென்ம ஜாத, ஜாதி பேதங்களும் உண்டாய் உண்டாய் வந்து வந்து போய்க் கொண்டிருக்கவும், அந்தந்த தேச, கால, கர்ம, ஜென்ம, ஜாதிகளின் பேதங்களை அனுசரித்தே அவரவர்கள் நடக்கவேணுமாய் அவரவர்களுக்குரிய சாஸ்திர விதியும் ஏற்பட்டிருக்கவும், அந்தப்படியே நடவாமலும் இவைகளை எல்லாம் கைவிட்டு வர்ண சங்கிரங்களாய் போவதில் என்ன பயனோ அதையும் சொல்லவேண்டும்.

## (அனுசார பீடையே தொத்து வியாதிக் கிடமென்பது)

---

17. இப்போது இவ்விந்தியாவில் மனிதர்களை எல்லாம் பிடித்துக்கொண்டிருக்கும் அனுசாரபீடைகளாலுண்டான தொத்து வியாதிகள் சம்பவித்துக்கொண்டு வருகிறதேயன்றிவேறல்ல இவ்வியாதிகளை நீக்க ஊரைவிட்டும் வீடுகளைவிட்டும் ஓடிப்போகிறார்களல்லவா? அப்படிக்கு ஓடிப்போவதினாலும் வேறு எவ்வித சுத்தியின் காரணத்தாலும் அவரவர்களின் தேகசுத்தி இல்லாமல் தேகங்களைப்பிடித்த அனுசார பீடைகளான நோய்கள் நீங்குகிறதில்லை ஊர் சுத்தியினால் ஊரைப்பிடித்த பீடையும் வீடுகளின் சுத்தியினால் வீட்டைப் பிடித்த பீடையும் உடல்களின் சுத்தியினால் உடலைப்பிடித்த பீடைகள் நீங்குமேயன்றி வேறெந்த சுத்தி

யினலும் உடலைப் பிடித்த பீடைகள் நீங்குவதில்லை என்பது திண்ணம்; அவரவர்களின் ஜாதி குலவர்ணாசிரமத்தில் அவரவர்கள் இராமல், தங்பான துர்போஜன துச்சங்கத்தினல் தொத்து வியாதிகளுண்டாய் சங்காத மரணங்களை அடைந்துக்கொண்டு வருவதை சகல ஜனங்களும் பார்த்துக்கொண்டிருந்தும் இஃது பிரஜைகளின் புத்தியில் படாமல் போனதும், இவைகளை அரசர்களும் கவனியாமல் போனதும் காலகர்ம கதியேயன்றி தெய்வகதிஅல்ல என்பதை ஊகிக்கத்தக்கதாயிருக்கிறது. பிளேக் நிவாரணத்தைப்பார்க்க.

## ஜாதி பேதமில்லாமை தேகாத்ம புத்தி உடையோர்க்கா? ஜீவாத்ம புத்தி உடையோர்க்கா என்பது.

18. தேகமே தானென்கிற தேகாத்ம புத்தி உடையோர்க்கு அந்த தேகத்துக்குண்டான ஆசார அனுசாரங்களும், உயர்வு தாழ்வும், ஜாதி ஜென்ம குலபேதங்களும் அத்துப்போனதும் தேகாபிமானிகளான தேகிகளாகிய ஜீவர்களுக்கு நம்ம மனிதகுமாரர்களல்ல தேவ குமாரர்களே என்கிற புத்தியில்லாமல் போனதும் நாம் மனுஷிய குமாரர்களென்கிற புத்தி உண்டாயிருக்கிறவர்களுக்கு தாங்கள் ஜனித்த ஜாதி ஜென்ம குல பேதங்கள் மாத்திரம் அத்துப்போனதும் இவைகளெல்லாம் ஜீவர்கள் முஜ்ஜென்மங்களில் செய்து வந்த ஊழ்வினைகளின் பயனென்றே ஊகிக்கத்தக்கவையாயிருக்கிறது.

## ஜனிக்கும் ஜாதி ஜென்மங்கள் பீஜபாரம்பரையேயன்றி ஜீவபாரம்பரை அல்ல என்பது.

19. நானாவித நாமரூப பேதங்களான ஜாதி ஜென்மங்கள் சிருஷ்டிகாலம் தொடர்ந்து அந்தந்த பீஜவழியாகவே அந்தந்தஜாதி ஜென்மகள்

உண்டாய்க்கொண்டு வருவதாயிருக்கவும் அந்தந்த ஜீவர்களின் வினையின் படிக்கே அந்தந்த பீஜபாரம்பரையாயே அந்தந்த ஜென்மங்களையே அடைந்து வந்துக்கொண்டிருக்கவும் உயர்வு தாழ்வான அந்தந்த ஜாதி ஜென்மங்களில் தானே ஜீவர்களின் வினையின்படி பிரவேசித்துக்கொண்டும் விதியை அடைந்துக்கொண்டும் வருதாயிருக்கவும் பீஜ பாரம்பரையாய் வந்துக்கொண்டிருக்கும் ஜென்ம ஜாதிகளுக்கு ஜாதி பேதமில்லாமல் ஒரே ஜாதியாய் போனது எவ்வண்ணமோ அதையும் அப்படிக்கு ஒரே ஜாதிகுலங்களாயிருப்பது எந்த ஜாதியோ அதையும் அப்படிக்கு ஒரே ஜாதி குலங்களாயிருப்பது உயிரா? உடலா? என்பதையும் இப்படிக்கு சிருஷ்டிகாலம் தொடர்ந்து இதுவரையில் ஒரே ஜாதியாயிராமல் போனதும், ஜாதி குலங்களிலும், வித்தியா தனங்களிலும் புண்ணிய, பாப சுகதுக்கங்களிலும் எல்லா ஜாதியாரும் சமனாயிராமல் வெவ்வேறுபட்டிருப்பதும் இப்படிக்கிருக்க எல்லோரும் மேன்மையே அடைந்திருக்கக்கோருவதும் என்ன காரணமோ அவைகளையும் அப்படிக்கெல்லோரும் சமனாயிராமல் சில விஷயத்தில் உயர்வு தாழ்வாயும் சிலர் ஆண்டை அடிமைகளாயும் சிலர் குரு சிஷ்யர்களாயும் சிலர் அதிகாரிகளாயும் ஊழியர்களாயுமிருப்பதென்ன? அரசர்கள் முதல் நீசர்கள் வரையிலும் சர்வ சமனாயிராமல், வேறுபட்டிருப்பவை எல்லாம் நீங்கள் சமன் செய்யாமல் ஜாதி மாத்திரம் [illegible] வந்தது எப்படி? அது எதை உத்தேசித்து? [illegible] இருக்கும் முதன்மையானது ஜாதி ஜென்மங்களே காரணமல்லவா?

சென்னை-600 008

## அவரவர்களுக்கு அவரவர்களின் ஜாதி குலாசாரமே முக்கிய தர்மம் என்பது.

20. உலகத்தில் தர்மம் என்னவெனில் அந்தந்த ஜாதி குல கோத்திர வம்ஸ பாரம்பரையின் ஆசாரங்களை அனுசரித்து நடக்க

வேண்டியது முக்கிய தர்மம். இப்படிக்கில்லாமல் சுதர்மங்களிலே யே விஸ்வாஸத்தை அற்றுப்போனவர்கள் மற்றெந்த தர்மங்களில் விஸ்வா ஸ்தையோடிருப்பார்கள். அப்படிக்கிருந்தாலும் பயனுண்டோ? சுதர்மத்தையே கைவிட்டவர்களை எந்த நீதியான நியாயங்களை எவ் விதமாய் நடத்தப் போகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் அதிகாரி களாய் ஏற்படுவதில் உலகங்களுக்கு என்ன நன்மை உண்டாகும்மா அவைகளையும் சொல்லவேண்டும். ஜாதிபேதங்களே இல்லாத போது உருவநாமங்கள் உண்டோ? உருவநாமமில்லாமைக்கு ஜாதி நாமங்களும், ஜாதி நாமமில்லாமைக்கு ஜாதியும ஜாதி பேதங்களு முண்டோ? மனுஷ்ய ஜாதி, குல, கோத்திரத்தோர்களெல்லா ரும் தாங்கள் இன்ன தேசத்தோரென்றும இன்ன ஜாதி குல கோத்திரத்தாரென்றும் இன்னாருடைய மக்களென்றும், இன்னவம ஸத்தாரென்றும இன்னாருடைய வார்சுக்களென்றும், இப்படிக்கான அநேக பேதங்களோடே கூடிக்கொண்டும, உலக விவஹாரங்களை செ ய்துக்கொண்டும் இப்படிக்கு அரசர்கள் முதல் நீசர்கள் வரையில் பேத விவஹாரிகளாகவே இருக்க இவைகளுக்கெல்லாம காரணமான ஜென்ம ஜாதிகளை நீக்கவந்ததும், நீங்களும் இப்படிக்கே பேதப்பட்டிருந்துக்கொண் டும் உலக விவஹாரங்களையே செய்துக்கொண்டிருக்க ஜாதிமாததி ரத்தில் பேதமில்லையென்று சொல்லததுணிந்து வெளிவந்தது எந் தக்காரணத்தைக்கொண்டோ? எந்த சட்ட சாஸ்திரங்களைக் கண்டோ எந்த ராஜநீதியைக் கொண்டோ அதைச் சொல்லவேண்டும் நீங்கள் மனித குமாரர்களா இவ்விரண்டும கெட்டவர்களா? இப்போது இவ்விந்தியாவை ஆளுகின்ற இந்த அரசர்களுக்குரிய சகல மத சாஸ்திரங்களும, ஜாதிபேதம் உண்டெ ன்பதாய் சொல்லுகிறதா? இல்லையென்று சொல்லுகிறதா? உலகத் தில் மனுஷியர்களை உலகத்தார் யாருடைய குமாரர்களென்று சொல்லுகிறார்களோ அதையும் சொல்லவேண்டும். மனுஷிய குமா ரர்களே ஆனால் அவரவர்களின் வம்ஸ பரம்பரையாய் எந்தெந்த

ஜாதி குல கோத்திரத்தோருக்கு பிறந்தார்களோ அந்தந்த தந்தை தாய்களுக்கே மக்களாய் இருக்கிறார்களே யன்றி வேறொருவருக்கு மக்களாவதில்லை

## (ஆதியிலுண்டான மனிதன் ஒரே ஜாதி குலத்தானென்பது.)

21. ஆதியிலுண்டான தந்தை தாய்கள் ஒரே ஜாதிதானெனில் ஆதியிலுண்டான தந்தை தாய்கள் ஒன்றாயிருந்தது எப்படிக்கெனில ஒரே மண் தண், நெருப்புகளில் உதித்தவர்களாயிருந்தார்களே யன்றி அவர்களுக்குப் பிறகு இப்போது உதித்துக்கொண்டுவரும் மாம்ஸ உருவங்களிலிருந்து பரம்பரையாய் உதித்தவர்களன்று அது எப்படிக்கெனில் அந்த மண். தண, நெருப்பினாலேயே பானை சட்டி, குடங்கள். உண்டாய்க்கொண்டு வருவது போல், ஆதியிலுண்டான மனிதனென்றறிக. மாம்ஸ ஜாதி ஜென்மங்களாலேயே மாம்ஸ உருவங்கள் உண்டாய்க்கொண்டு வருகிறதேயன்றி மண்ணாலுண்டாய்க்கொண்டு வருபவர்களன்று. எப்படிக்கெனில் மண்ணாவுனல் அதாவது அம்மண்ணினாலுண்டாகின்ற ஓஷதிகளின் அன்னரசங்களினாலுண்டான மனிதர்கள் முதலானவர்களின் சுக்ல சுரோணித ஜலங்களாலேயே மாம்ஸ உருவங்களாய்க்கொண்டு வம்ஸ பரம்பரையாய் வந்துகொண்டிருக்கிறார்களே யன்றி வேறு விதமல்லவென்று அறியத்தக்கது உதாரணம் ஒரே விருக்ஷத்திலிருந்து அநேக பீஜங்களும், அநேக பீஜத்திலிருந்து அநேக விருக்ஷங்களுமாய் உண்டாய்க்கொண்டு வருகிறதேயன்றி ஒரு விருக்ஷத்துக்கு ஒரே பீஜமும் ஒரு பீஜத்துக்கு அநேக விருக்ஷங்களும் உண்டாகிறதை ஒருவரும் கண்டதில்லை என்பது திண்ணம் இப்படிக்கு அந்தந்த தந்தை தாய்களுக்கு அநேக மக்களாய் உதிக்கிறார்களேயன்றி அநேக மக்கள்களுக்கு ஒன்றான தந்தை தாய்கள உதிப்பதில்லை.

## மனிதர்கள் எல்லோரும் ஒரே உருவமுள்ளவருகையால் ஜாதிகுல பேதங்களும் இல்லையென்பது அஸம்பாவிதம்.

22. மனிதர்களென்பதில் ஒரே ஜாதியானாலும் தேவஜாதிகளென்றும், மனித ஜாதிகளென்றும், பக்ஷி, பன்னக ஜாதிகளென்றும், அசுர. ராக்ஷஸ ஜாதிகளென்றும், பூசர, கேசர, ஜல சராதிஎன்றும் அநேக ஜாதிகளுண்டு இவைகள் ஒன்றொன்றுக்குள்ளும் அநேக சஜாதிகளின பிரிவுகளுண்டு. இவைகளில் ஜென்ம, ஜாதி, குல கோத்திர வம்ஸங்களான அனந்த பேதங்களுண்டு. இவைகள் தவிரவும் குண, மனே, பத்தி, இந்திரிய கர்ம ஜாதங்களிலும் அநேக பேதங்களுணடு. இப்படிக்கு அநேக பேதங்களான ஜெகத் ஜென்ம, ஜாதி குல கோத்திரங்களாக ஜீவர்களின் வினையின்படி ஜென்மங்களை அடையும்பொருட்டு தேவன் படைததிருக்க இவைகளை யெல்லாம் மனிதர்கள் மாற்றி ஒரேஜாதி குலங்களாக செய்து எல்லோரும் ஒரே கதியை அடையும்படி செய்வது எவ்வண்ணமோ அவைகளையும் சொல்லவேண்டும். மனிதர்களிலும் ஸ்திரீ, புருஷ, நபும்ஸகர்களென்று ஏற்பட்டிருக்கிறதல்லவா?

---

# பிதாக்களுக்குபுத்திரர்கள் செய்யவேண்டிய கட்டாய கர்ம தர்மங்கள்.

---

23. அந்தந்த ஜாதிகுல மக்களுடைய தாய் தந்தைகள் ஜீவனோடிருக்குமளவும் அவரவர்களுக்குப் பிறந்த மக்கள் அன்ன பானாதி வஸ்திரங்கள் கொடுத்து ரக்ஷித்து வரவேண்டும். அந்தந்த தந்தை தாய்கள் உடலைவிட்டமேல் அவ்வுடலை அந்தந்த குலகோத்திரங்களுக்கு ஏற்பட்ட சாஸ்திர விதியின்படி அவ்வுடல்களை அடக்கம் செய்து

அவ்வுடலிலிருந்து வெளிப்பட்டுப்போன தேவாவியான உயிர்களை உத்தேசித்து செய்யவேண்டிய கர்ம தர்மங்களை நடத்திக்கொண்டு வருவது மக்களுடைய கடமை ஆகும் அப்படிக்கு செய்யாவிடில் அந்த மனுஷியர்களுக்குப் பிறந்த மக்களாகிறதில்லை. தேவகுமாரர்களுமாகிறதில்லை நன்றிகெட்ட பாபிகளாகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் லோகோபகாரிகளாகவும், உலகத்தோருக்கெல்லாம் உதவி புரிவதாகவும் ஜீவகாருண்யமுள்ளவர்களாகவும் ஆகிறதெப்படி? மேல் சொன்னபடி மனிதர்கள் தேவாவியான தேவகுமாரர்களேயாகில் உடலைவிட்டு வெளிப்பட்டுப்போன உயிரெதுவோ, அதுவே தன் உயிரானதால் அவைகளுக்கு நல்ல கதியும் நல்ல உலகமும், நல்ல உடலும் உண்டாகவேண்டி நல்ல கர்மங்களைச் செய்து தங்கள் தங்கள் உடலில் தங்கள் தங்கள் உயிரிருக்குமளவும் கர்ம தர்ம தானங்களைச் செய்யவேண்டியது அவசியமே ஆகிறது அது எப்படிக்கெனில் உயிரில்லா உடல்களும் உடலில்லா உயிர்களும், ஆயுதங்களில்லா மனிதர்களும், மனிதர்களில்லா ஆயுதங்களும், யாதொரு தொழிலும் புரியாதது போல் என்று அறியவேண்டும். இது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. தவிர தூங்கும்போதும், மூர்ச்சை அடைந்தபோதும், மரணமடைந்தபோதும், உடல்களிலிருந்தும் அது யாதொரு தொழிலும் புரிவதில்லை. உயிர்கள் விழித்திருக்கும்பொழுது அவ்வுயிர் அவ்வுடலை அபிமானித்துக்கொண்டிருக்கிறது, தூங்கும் பொழுது அவ்வுடல்களில் தானே உயிர்களிருந்தும் அவ்வுடலை அபிமானிக்காமல் இருந்தமையால் யாதொரு தொழிலும் புரிகிறதில்லை. விழித்துக்கொண்டிருப்பதற்கும் தூங்குவதற்கும் மத்தியிலுள்ள கனவில் முன் நினைவில் கண்டதை கனவில் காணுவன ஜெகத்தும், ஜெகத் பொருள்களும் காண்பதென்னவெனில் உயிரானது உடல் உலகுகளின் பற்றல்களைவிட்டும் துயிலையும் அடையாமல் இவ்விரண்டிற்கும் நடுவில் எது இருக்கிறதோ அது கனவில்கண்ட நினைவானதினால் அக்கனவின் நினைவைக்கொண்டு முன் நினைவில் பார்த்த உடல் உலகுகளை அக்கனவின் நினைவால் பார்க்கிறது. இப்படிக்கே விழித்துக்கொண்டிருக்கும் பொழுதும் மன

தின் தீனேவினுல் இவ்வுலகைப் பார்க்கப்படுகிறது. ஒரே மாம்ஸ உருவங்களெல்லாம் அநேக மிருகாதிகளான ஜென்மங்களாயும், அஜ்ஜென்ம கூட்டங்களே ஜாதிகளாயும், அந்த ஜாதி ஜென்மங்களிலேயே சஜாதி விஜாதி பேதங்களான அநேக உட்பிரிவுகளாயும், அநேக உருவ பேதங்களாயும் ஒரு மண்ணில்தானே ஒன்றக்கொண்டு அநேக பேதங்களான பானை, சட்டி, குடங்கள் உண்டானதுபோல் மாம்ஸ உருவங்களெல்லாமும் அம்மண்ணில்தானே உதித்து அம்மண்ணிலேயே நாஸத்தை அடைந்துகொண்டுவருகிறது. இப்படிக்கு மனித பீஜங்களில் உதித்தது மனித தேகங்களும், அத்தேகத்திலிருந்து உதித்தது மனித பீஜங்களும் அந்தந்த வம்ஸ பரம்பரையாய் உண்டாய் வந்துக்கொண்டு இருக்கிறதே தவிர வேருக மாறுவதில்லை. தேகங்களில்லாமல் அப்பீஜங்களும் அப்பீஜங்களில்லாமல் அத்தேகங்களும் உண்டாவதில்லை. இப்படிக்கே விருக்ஷங்களு மென்றறிக. நீங்கள் பல பீஜங்கள் சேர்ந்து ஒரு பீஜமாயும், பல விருக்ஷங்கள் சேர்ந்து ஒரு விருக்ஷமாயும் உண்டாவதைக் கண்டது உண்டா? இப்படிக்கு மனிதர்களிலும் அநேகமாயிருப்பவர்கள் ஒரே மனிதனுக ஆவது எவ்வண்ணம். அநேக ஜென்ம ஜாதங்கள் கூடினது ஜாதிகளா? அல்லது ஜாதிகளென்பது வேறு? ஜாதிவகுப்பில் ஜாதிபேதங்களும் ஜென்ம வகுப்பில் ஜென்ம பேதங்களும் ஜாத வகுப்பில் ஜாத பேதங்களும அநேகமாய் உண்டாய் இருக்க எல்லா ஜென்ம. ஜாத ஜாதிகளும் ஒன்ருவது எந்த அபேதத்தைக்கொண்டு? ஜாதிபேதமத்தவர்களுக்கு ஜாத பேதங்களும், ஜாத பேதமத்தவர்களுக்கு ஜென்ம பேதங்களும், ஜென்ம பேதமத்தவர்களுக்கு ஜகத்பேதங்களுமுண்டா? நான், நீ அவன் இவன், என்னுது, உன்னுது, என்கிற பேதங்களுண்டா? இப்படிக்கான ஜகத், ஜென்ம, ஜாத, ஜாதி, குல, வஸ்து பேதங்களுடையவர்களுக்கு ஜெகத் விவகாரங்களும் வியாஜ்ய வியாபாரங்களும், உயர்வு தாழ்வுகளும் ஏற்படாமலிருக்கக்கூடுமோ? இப்படிக்கான பேதங்களை உடையவர்களான உலகத்தோர்களுக்கு ஜாதி ஜென்ம பேதங்கள் இல்லாமலிருப்பதும் கூடுமோ?

# தேகாத்ம புத்தி உடையோர்களுக்கு

## ஏற்பட்டது ஜாதி ஜென்ம குலாசார பேதமென்பது.

24. தேகமே தானென்கிற தேகாத்ம புத்தியையுடைய மனிதர்களுக்கு, ஜாதி, ஜென்ம பேதமில்லாமையாம நான் ஜீவாத்மா என்கிற புத்தி உடையோருக்குதான் பரமாத்ம சொரூபனென்கிற புத்தியும் உண்டாவதுண்டா ? தேகாத்ம புத்தி அற்றவர்கள் ஜீவாத்மாக்களாயும் ஜீவாத்மபுத்தி அற்றவர்கள் பரமாத்மாக்களாயும் இருப்பதைத தெரிந்துக்கொண்டிருப்பதுதானுண்டோ ? பரமாதமாக்களிடத்திலிருந்தே ஜீவாத்மாக்களும் ஜீவாத்மாக்களிடத்திலிருந்தே தேகாத்மாக்களுமாய் வந்துக்கொண்டிருக்கிறோம் என்பதையாவது தெரிந்துக்கொண்டதுண்டா மனுஷிய தேகமே சகல ஜகத், ஜென்ம, ஜாதி ஜாதிகளையும், படைத்திருப்பதாயும், சகல ஜெகத் விசித்திரமான டெலகிராப், ரெயில், மோட்டார், பைசகில்முதலிய அபூத கல்பனையான சகல காரியங்களையும் செய்து வருகிறதென்றும் பாவனை பெய்துகொண்டிருக்கும் மூடஜனங்களுக்கு ஜகத், ஜென்ம, ஜாதி பேத பாவனை அத்து போவதுமுண்டோ? தொழில் கருவிகளே தொழில்களை செய்து வருவதை யாருவது பார்த்ததுண்டா ? இப்படிக்கு மனித ஜென்மங்களைக்கொண்டு ஜீவர்களான உயிர்களே சகல தொழில்களும் நடத்துவதாயிருக்கவும் உடல்களை விட்டுப்போன உயிர்கள் இல்லாமல் உடல்கள் மாத்திரம யாதொரு தொழிலும புரியாமல் பிணங்களாய் கிடக்கவும், உலகத்தோர் பிணமாயிருக்கும் உடலைப்பார்த்துக்கொண்டிருந்தும் வெளிப்பட்டுப் பட்டுப்போன உயிர்களையே உத்தேசித்து அவரவர்களின மக்களை உங்கள் தந்தை தாய் போய்விட்டார்களா என்று கேட்பதும் அவர்கள் போய்விட்டார்களென்று சொல்வதும் விசனிப்பதாயுமிருப்பதென்ன ? தவிர அந்தகந்தை தாய்களின

உடல்களை பருமரியாமல் புதைத்தோ, பொசுக்கியோ போகவேதென்ன? சகலமான தொழில்களும் செய்வதும், செய்விப்பது சேதனமான உயிரு, அசேதனமான உடலா, உடலை விட்டுப்போன உயிர்களை உத்தேசித்தே சகல கர்ம தர்மங்களும் செய்வதாயிருக்கவும் உயிருடனிருக்கும் தந்தை தாய் உடல்களிலிருந்தே மக்களுடைய உயிர்களும் உடல்களும் உண்டாய் வந்துக்கொண்டிருக்கவும், உயிரில்லா உடல்களிலிருந்தே யாதொரு பிறப்பும் இல்லாமலிருக்கவும். மாம்ஸ உருவங்களான மனிதர்களால் சகல தொழில்களும் செய்யப்படுகிறதென்று நினைத்துக் கொண்டிருக்கும் மனிதர்களுடைய புத்தியானது சுபுத்தியா குபுத்தியா ஜெகத் காரணரூபருன கடவுளின் ஆக்ஞையின்படி காரிய ரூபரான ஜீவர்களும், இந்த ஜீவர்கள் நினைப்பின்படி ஜென்ம ரூபங்களான தேகேந்திரிய மனப் பிராணாதிகளும் உண்டாய் அக்கருவிகளைக் கொண்டும், ஜகத் வஸ்துக்களைக்கொண்டும், உயிர்கள் சகல தொழில்களும் நடத்தப்படுகிறதென்று நம்புவீர்களாக.

## இந்து மார்க்கம் சொல்லுவதாவது

காரியோபாதிரியம் ஜீவ! காரணோபாதி ரீஸ்வர:
காரிய காரண நிர்முக்தே, சபூர்ணபோதே விசிஷ்யதே என்று சொல்லப்படுகிறது.

## கிறிஸ்து மார்க்கம் சொல்வதாவது

மாம்ஸ உருவங்கள் ஒன்றுக்கும் உதவாது. ஆத்மாவியே உயிர்ப்பிக்கிறதென்றும், தேகங்களே தேவாலயங்களாயிருப்பதால் அதுகளை

அசுத்தப்படுத்தக்கூடாதென்றும் மத்தேயு 15ல் 28ல் மாம்ஸ உருவங்களை சொல்லு வல்லவர்களுக்கு பயப்படவேண்டாமென்றும் உங்களாத்மாவையும் சரீரத்தையும் நரகத்தில் தள்ளுபவர்களுக்கு பயப்படவேண்டுமென்றும் சொல்லுவதை பார்ப்பீர்களாக.

### பேதமுடையதே ஜகத் ஜென்ம ஜாதிகள் என்பது.

25. சகல பேதங்களையும் உடையது ஜெகத்தா, சகல பேதங்களும் அற்றது ஜெகத்தா, சகல பேதங்களும் உடையோர்கள் ஜெகத்தோர்களா, சகல பேதங்களும் அற்றவர்கள் ஜெகத்தோர்களா? ஜெகத்பாவனை உடையோர்கள் ஜெகத்தோர்களா? ஜெகத் பாவனை அற்றவர்கள் ஜெகத்தோர்களா, உலகத்தில் உதித்த சகல மாம்ஸ உருவங்களுக்கும் ஜாதி ஜென்ம குல கோத்திர வம்ச மாதாபிதாக்களின் பேதங்களாலேயே இப்படிக்கான ஜாதிபேதங்களுண்டாயிருக்கும் போது மனுஷீய ஜாதி ஜென்மங்களில் மாத்திரம் பேதமில்லை என்பது எல்லை ஒரு தேசங்களுக்கொரு தேசப் பேதங்களாயும் ஒரு மனிதர்க்கொரு மனிதர் பேதங்களாயும் இருக்கும் காரணமென்ன, அபேதமுள்ளவர்களின் நிலைமை எது, ஈசுவரனுடைய வஸ்துக்களில் எந்த வஸ்துக்களுக்கு பேதமில்லையோ அதைச் சொல்லவேண்டும். ஜாதிபேதமில்லையா ஜென்ம ஜாதி பேதங்களில்லாமையாலா, குல கோத்திர பேதங்களில்லாமையாலா மனோ புத்தி பேதங்களில்லாமையாலா, மானுஷியமான பேதங்களில்லாமையாலா, இத்தியாதிகார கனதன சம்பத்துக்கள் பேதமில்லாமையாலா பசி தாகம் ரோக பீடைகளின் பேதங்களில்லாமையாலா, ஒருவன் செய்த புண்ணிய பாபங்களையும், ஒருவன் அனுபவிக்கும் சுக துக்கங்களையும் எல்லாரும அனுபவிப்பதிலலா அதையும் ஒன்றாயிருக்கும் ஜெகத் ஜென்ம ஜாதி கர்ம வஸ்துக்களுக்காவது பேதமில்லாமையுண்

டீர், முல்வான் ஜெஜாத் ஜென்ம ஜாத, ஜாதி வஸ்துகளுக்கு பேதமில்லாமையுண்டா, உலகு ஒன்றுக்கொன்று பேதங்களாயிருக்கிறதுகளா, ஒன்றாயிருக்கிறதுகளா, அதையும் சொல்லவேணுமம்.

## பலவித உயர்வு தாழ்வான ஜென்ம ஜாத வஸ்து பேதங்களுடைமைத ஜெகத்து.

26. தேச கால வஸ்துக்களும் அரசர்களும் பிரஜைகளும் பலவாயிருக்கிறார்களா, ஒன்றாயிருக்கிறார்களா, ராஜாக்களின் நீதி விசாரணையில் முன்னர் விசாரிப்பது என்ன, நீயார், உன் ஜாதி குலம் கோத்திரமென்ன? உன் தந்தை தாய்கள் யார் உன் கர்ம தர்மங்களென்ன, தொழில்களென்னவென்று விசாரித்த மேல் மைத்த சங்கதிகளை விசாரிக்கிறார்களா, அப்படிக்கில்லாமல் மைத்த சங்கதிகளை மாத்திரம் விசாரிக்கிறார்களா. அநித்தியமான ஜீவனக்குக்குரிய தொழில்களை தினமும் ஜனங்கள் நடத்தி வருவதுபோல் நித்தியமாயிருக்கும் ஜீவனுக்குரிய தொழில்களை கைவிட்டதென்ன, அரசர்கள் ரக்ஷிப்பதும் சிக்ஷிப்பதும் ஜனங்களுடைய ஜென்மங்களையா, ஜீவர்களையா, உண்டாக்குவதும் உடைப்பதும் உயிரா, உடலா, கடவுளால் வெவ்வேறான தேச பேதங்களையும் அவைகளை அநுசரித்த ஜென்ம, ஜாத, ஜாதி, குல வஸ்து பேதங்களையும் அவைகளை அநுசரித்த கர்ம தர்மங்களுமாய் படைத்திருக்கவும் அவைகளை அநுசரித்து முன்னுள்ள அரசர்கள் நல்லோர்களும் அரசையாண்டு வந்திருக்க, இந்த பரவை இப்போது ஆளும் அரசர்கள் இப்படிக்கில்லாமல் [illegible] தான கர்மங்களையும் தொழில்களையும் நடத்[illegible] ஜென்ம, ஜாத, ஜாதி, குல, கோத்திர [illegible] நல்ல கர்மங்களையும் நல்ல தொழில்களையும் எல்லோரும் அச்சமி

ன்றி செய்யலாமென்க சட்ட திட்டங்களை ஏற்படுத்தி இருப்பதை இந்தியாவிலுள்ள ஒவ்வொரு இந்துப்பிரஜைகளும் ஆட்சேபியாமல் போனது காலகதியா? கர்மகதியா? மாம்ஸ உருவங்களான மனிதர்களை கொல்லவல்லவர்களுக்கு பயப்படவேண்டாமென்றும் உங்களாத்மாவையும், சரீரத்தையும் நரகத்திலழிக்கவல்லவர்க்கே பயப்படுங்களென்றும் கிருஸ்து மார்க்கமத்தேயு 10-ல் 28-ல் சொல்லியிருப்பதை யாராவது கவனித்ததுண்டா? ஜாதி ஜன்மங்களுக்கு உருவமே காரணமானால் சிலைகளாலும், மண்ணாலும், பொன்னாலும், லோகங்களாலும், கட்டைகளாலும் அநேக மனித உருவங்கள் உண்டாயிருப்பதை பார்க்கிறோமல்லவா, இவைகளும் மனிதர்கள் ஆவதுண்டா, அவைகளுக்கு உயிரில்லை என்றால் உயிரை விட்ட மனிதர்கள் எல்லாரும் அவைகளை விட ஈனர்களே அல்லவா, உயிர்களும் உடல்களும் ஒன்றாகுமா, உயிர்போனமேல் உடல்களும் உடல்கள் போனமேல் உயிர்களும் தனித்து வேறாயிருப்பதில்லை. உயிர்போனபிறகு உடல் [illegible] ருக்கின்றதை அவைகளை புதைத்தாவது போசுக்கியாவது போடுகிறார்கள். எல்லா மார்க்கங்களும் தேவாவியான உயிர்களுக்கே அநேக உடல்களின் சம்மந்தத்தினால் அநேகங்களான சஜாதி விஜாதிகளும் அந்தந்த சஜாதி விஜாதி ஜனனங்களிலும் அநேக பேதங்களும் உண்டாயிற்றென்றும் சொல்லப்படுகிறது. இவைகள் உங்கள் புத்திக்குபுலப்படுவது எங்ஙனம் இதை கொரிந்தியன் 15-ல் 46, 47, ப்பார்க்க.

உங்களுக்கு ஜாதியென்பது இன்னதென்றும், ஜாதகமென்பது இன்னதென்றும் ஜன்மமென்பது இன்னதென்றும் தெரியுமா தெரியாததினால் சொல்லுகிறோம். ஜாதியென்றால் மனிதர்கள் முதல் மிருக, கிருமி, கீடங்கள் முதலான ஈ எறும்புகள் வரையில் எண்பத்திநான்கு லக்ஷம் யோனி பேதங்கள். ஜாதமென்றால் மனிதர்க்

ருட்பிரிவுகள். ஜென்மமென்றால் நிலைமையில் அநேக உருவ ஜன்ம பேதங்கள் இப்படியிருக்க இவைகளெல்லாவற்றிற்கும் மேன்மையான மனுஷீய ஜாதி ஜென்மங்களுக்கு மாத்திரம் ஜாதிபேதமில்லை என்று விளக்கினால் மற்ற ஜாதிகளுக்குரிய தொழில்களையும் ஜீவிப்பதற்கு அனைடாளும் ஆகாரங்களையும் தினந்தோறும் தொழில்களைச் செய்து சம்பாதித்து ஜீவிக்கிறதுகளேயன்றி வேறு விதமான அன்னபானாதிகளையும் தொழில்களையும் செய்கிறதில்லை. இப்படிக்கான விலங்கை மனிதர்களுக்கில்லாமல் அவரவர்களுக்குரிய தொழில்களையும் கைவிட்டு அன்னபானாதி ஆகாரங்களையும் விலக்கைதையன்றிபுசித்துக்கொண்டு வந்தால் மேல்கண்ட ஜாதிகளை விடவும் இவர்கள் ஈனர்களேயல்லவோ இப்படியிருந்தாலும் பிராமணர்களென்றும், க்ஷத்திரியர்களென்றும் வைசியர்களென்றும், சூத்திரர்களென்றும், சண்டாளர்களென்றும் ஒரே மனுஷியர்களுக்குள் பேதம் வருவானேனெனில் பஞ்ச பூதங்களென்றும், பஞ்ச பவுதிகங்களென்றும் பஞ்ச லோகங்களென்றும் பேதங்களுண்டாயிருக்கிறபடிக்கு ஜன்மங்களுக்கு ஜாதி குல வர்ண பேதங்களும் உண்டாயிருக்கிறது. ஒரு மனிதர்க்குள்ளே பேதம் வந்தது எப்படி எனில் பஞ்ச லோகங்களுக்குள் தங்கமானது எப்படிக் குயர்ந்ததோ அப்படிக்கும் அதற்குள் பத்து மாத்து தங்கமென்றும் எட்டு மாத்து தங்கமென்றும் ஏழு மாத்துத் தங்கமென்றும் ஆறு மாத்து தங்கமென்றும், ஐந்து மாத்துத் தங்கமென்றும் எப்படிக்குயர்வு தாழ்வு ஏற்பட்டதோ அப்படிபோல் ஜாதி குல வர்ணாசாரங்கள் மனிதர்களுக்கு ஏற்பட்டது. அது எதினால் எனில் ஒரு மட்டமான தங்கமே ஒவ்வொரு புடங்களுக்கும் களிம்புகள் நீங்கி மாத்து உயர்ந்து வருவதுபோல் மனிதர்களால செய்யப்படும், உயர்வு தாழ்வான. புண்ணிய பாப கருமங்களான புடங்களால் உயர்வு தாழ்வு ஏற்பட்டது. பிராமணர்கள எந்தவித உயர்ந்த

கர்மத்தால் உயர்ந்தோர்களானோர்களெனில் தாயின் கர்பத்தில் உயர்ந்த வீரியமானது பிரவேசித்திருக்கும்போதே அதை உத்தேசித்தே பும்ஸவனமென்றும், ஸ்ரீமந்தமென்றும் கர்மங்களைச் செய்து பிறந்தவுடனே ஜாத காமமென்றும், நாமகரணமென்றும், உபநயனமென்றும், வேதாப்பியாசமென்றும் விவாகமென்றும் இப்படிக்கு கட்டகர்மமாகிய புடத்தால் வேத வித்தியா புத்திகளும் அந்தவித்தியா புத்திகளால் அவையவைகளுக்குறிய அதிகாரங்களுமாய் உயர்ந்தோர்களானோர்களென்று வேதசாஸ்திரங்களில் முறையிடுகிறபடியால் பிராம்மணர்கள் முதல் சண்டாளர்கள் வரையில் அவரவர்களுக்குரிய தொழில்களாகிற கர்மங்களையேசெய்துக்கொண்டு அதினால்ஜீவித்துக்கொண்டு வருவார்களேயாகில் அம்மனிதர்க்குள்ளேயே ஜீவர்கள் எடுக்கும் ஜன்மங்கள் தோறும் உயர்ந்த ஜாதி குலமான ஜென்மங்களையே அடைந்து பின்பு ஜீவர்கள் தெய்வகதியை அடைவார்களென்று இந்த சாஸ்திரங்கள் முறையிடுகிறது. அது எப்படி எனில், உதாரணம் லௌக்கிக கர்மமான உத்தியோகத்தில் அவரவர்களுக்கு எற்பட்ட வேலைகளை ஜாக்கிறதையுடனும், பக்தி விஸ்வாசத்தையுடனும். புத்திசாலித் தனத்துடனும் பார்த்து வருவார்களேயானால் உயர்ந்த வேலைகளான பிரமோஷன்களை அடைவதுபோலும், குபுத்தியினாலும் அசட்டையினாலும மேலதிகாரிகளுக்கு கீழ்படியாமையாலும் வேலைபார்ப்பார்களேயாகில் தாழ்வான டீப்பிரமோஷனை அடைவது போலென்றறிக.

## தீர்மானம்.

நீங்கள் சொல்லுகிறபடிக்கு ஒரே ரக்த மாம்ஸங்களாலுண்டான மனுஷிய மிருக, ஜென்ம, ஜாதிகள் ஒன்றாயிருக்கவும், மனுஷிய, மிருக, பக்ஷிகள் முதலான சமூகப்படி ஜாதிகளுக்கே ஜாதி என்ற நாமங்

ஒன்றாயிருக்கவும் சகல ஜாதிகளிலுமுண்டான ஸமஸ்த ஜந்துக்களு
க்கும், பசிதாகமுதலான பாதைகள் ஒன்றாயிருக்கவும், சகல ஜாதி,
ஜெந்துக்கள் அன்னபானாதி ஆகாரங்களை சம்பாதித்து புஜித்துக்கொ
ண்டு உதயதிலும் அஸ்தமித்தவுடனே தங்கள் தங்களுக்குரிய இடங்க
ளுக்குச்சென்று அந்தந்த ஜாதிகளுக்குரிய வீடு, காடு, கூடுகளையும் அ
டைந்து நித்திரை செய்வதிலும் சமனாயிருக்கவும் தங்கள் தங்களுக்
குரிய பெண்டீர்மக்கள்களிலும் மனுஷியர்கள்முதல் மிருகாதிகள்வரை
யில் ஒவ்வொன்றும் சமனாயிருக்கவும் தங்கள் தங்களுக்குரிய இடம்,
ஸகல் பொருள்களை அடைவதிலும் காமக்குரோதாதிகளிலும், தங்
கள் தங்கள வீடுகாடு என்று அறிவதிலும் சமனாயிருக்கவும். மனித
மிருகாதிகள் ஒவ்வொன்றுக்கும் பேதங்கள் ஏற்பட்டிருப்பதென்ன,
அப்படிக்கு மனுஷிய மிருகாதி பேதங்களாக ஜென்மங்கள் உண்டா
வதற்குக் காரணமென்ன, இப்படிக்கான சகல ஜாதி ஜென்மங்களும்
ஒன்றாய்ந்தே பாவனையுண்டாயிருக்கப்பட்டவர்களுக்கு ஜாதிபேதமி
ல்லையென்பது ஒக்கும். இவைகள் எல்லாவற்றிலும் பேதங்கள் ஏற்
பட்டு மனுஷிய ஜாதிகளில்மட்டில் பேதமில்லையென்று வெளிவந்த
து ஜெகத் வஞ்சகர்களே ஆகிறார்களல்லவா, ஒன்று சகல ஜாதிகளுக்கு
ம் பேதமில்லையென்பதையாவது ஒப்புக்கொள்ளவேண்டும். அல்லது
சகல ஜாதிகளுக்கும் பேதமுண்டென்பதையாவது ஒப்புக்கொள்ள
வேண்டும் அப்படிக்கில்லாமல் சகல ஜாதிகளுக்கும் பேதமுண்டென்ப
தை ஒப்புக்கொண்டு மனுஷிய ஜாதிகளுக்கு மட்டில ஜாதிபேதமில்
லையென்று வெளிவந்த ஜெகத் வஞ்சககருத்தேயல்லவா, அவைகளி
லும் ஜென்ம பேதங்களை ஒப்புக்கொண்டு ஜென்ம சமுஷ்டிகளான ஜா
திகளுக்கு மாத்திரம் பேதமில்லையென்பது எப்படிக்கூடும். யாருக்கு
ஜாதிபேதமில்லை என்றால் யாதொரு காமரூப ஜெகத் ஜென்ம பா

வனை அற்று நீ நான் என்கிற பாவனையுமற்று ஜெகத்பாவனையுமற்ற
வர்கள்யாரோ அவர்களுக்கு ஜாதிபேதமில்லையென்பது ஸத்தியம். இப்
படிக்கான பேதபாவனை உள்ளவர்களுக்கு சகல ஜாதி, ஜென்ம பேத
பாவனை உண்டென்பது ஸத்தியம இவ்விரண்டு வழியும் அற்றவர்கள்
யாரோ அவர்கள்தான் சகலத்திலும் கெட்ட இப்பந்திகளெ
ன்று சொல்லப்படுவார்கள். ஜகத்தில் ஜாதி ஜென்மங்களும், ஜாதி
ஜென்மபேதங்களும் ஏற்பட்டது ஜென்மங்களுக்கேயன்றி தேகங்
களில் வசிக்கின்ற ஜீவர்களுக்கல்ல. ஜீவர்கள் தேவர்களைப்போலவே
ம்தேவாவி உருவாள். ஜாதி ஜென்மங்களானது மனிதர்களான மாம்ஸ
உருவாள். ஆகையால் ஜாதிகளும் ஜாதி ஜென்மபேதங்களும் மனுஷி
யர்களுக்கும், மனுஷிய குமாரர்களுக்குமேயன்றி தேவர்களுக்கும் தே
வ குமாரர்களுக்கும் இல்லையென்பது திண்ணம். இப்படிக்கான பகு
த்தறிவு ஜாதிஜென்ம பேதமில்லையென்று சொல்லிக்கொண்டுவெளிவந்
தவர்களுக்கில்லை. இப்படியிருக்க இவர்பண்டிதர்களென்றும் தர்ம
சாஸ்திரவிதியின்படி உலகத்திலுள்ள ஜனங்களுக்கு உலக விவகார
ங்களான தர்மநீதியுள்ள அதிகாரிகளாகவும் ஏற்படக்கூடுமோ, இதனை
புத்திமான்களான கனதனவான்கள் யோசிக்கவேண்டுமல்லவா, தவி
ர கர்ம உபாஸ்த்தை பக்தியான மூடையோர்களில் எந்தஜாதியாரு
ஞலும், அவர்களில் எவர்கள் தாங்கள் ஜனித்த ஜாதி, குலாசாரங்களை
மாற்றிக்கொண்டு யாதொரு ஜாதி குலாசாரங்களிலும் சேருமல் எந்த
ஜாதியாருக இருந்தார்களோ அவர்களையும் தெரிந்துகொள்ளவேண்
டும். எல்லாமனித உருவங்களும் ஒன்ருய் ஒரே நோக்கமுடையதாயிருப்
பதால் எல்லா மனுஷிய ஜாதிகளும் ஏன் ஒன்ருயிருக்கக்கூடாது என்று
கேட்பீர்களேயாகில் எல்லாமனிதர்களும் ஒரேயிடத்தில் கூடியிருக்கும்
போதும் ஒருவரை ஒருவர் பார்க்கும்போதும், இவனிவன் இன்னின்
னனென்றும், இன்னின்ன நாம, ரூப, குண, கர்மாதிகாரங்கள் உடையவ

னென்றும் பகுத்தெரிந்துக்கொள்வது எந்த அபேத பாவனையோ அதையும் சொல்லவேண்டும். ஆதியிலுண்டான ஒரே மனுஷியன் ஒருவன்தானே, அவ்வொருவனுக்கே இப்போதிருக்கும் மனிதர்கள் எல்லோரும் அந்த ஒரே ஜாதி, ஜென்ம, ஜாத. குல, கோத்திர வம்ஸத்தார்கள் தானே என்று ஒரு கேள்வி கேட்கிறார்களல்லவா, ஆதியிலுண்டான ஒரே மனுஷியன் எந்த ஜாதி ஜென்ம ஜாத குலத்திலுண்டாவனெவனோ அதகளையும் இப்போதுண்டாயிருக்கும் மனுஷியர்கள் எந்த ஒன்றான ஜாதி ஜென்ம. குலமும் இல்லாதவர்களோ அதையும் சொல்லவேண்டும் ஆதி மனுஷியன் எந்த மாம்ஸ உருவமான ஜாதி ஜென்ம குலத்திலுதித்தவனோ அதையும் சொல்லவேண்டும் ஜகத்திலுதித்த எல்லோருக்கும் மாம்ஸ உருவமான ஒருவனை காரணமென்று எந்தமார்க்கம் சொல்லுகிறது.

## ஜாதி ஜென்ம கர்ம தர்மங்கள் நடத்தை.

ஜாதி ஜென்ம கர்மதர்மங்கள் ஒன்றுக்கொன்று தொடர்ச்சியாகவே இருக்கிறதுகள் ஜாதி, ஜென்மமில்லாத கர்ம தர்மங்களும், கர்ம தர்மங்களில்லாத ஜாதி, ஜென்மங்களும் ஜாதி, ஜென்ம பேதங்களில்லாத கர்ம தர்ம பேதங்களும், கர்ம தர்ம பேதங்களில்லாத ஜாதி ஜென்ம பேதங்களும் உண்டாகிறதில்லை என்பது திண்ணம். ஜாதி ஜென்மங்களுக்கு பேதமில்லாதபோது கர்ம தாமங்களுக்கும் பேதமில்லாமலிருக்கவேண்டும் உலகத்தில் அப்படிக்கில்லை. ஜாதி ஜென்மங்களும் அனந்த விதம், கர்ம தர்மங்களும் உச்ச நீசகளும் அனந்தவிதமாயிருக்கிறதுகள். இந்த ஜென்ம கர்மங்கள் ஜீவர்களாலே ஜென்மங்களைக்கொண்டு செய்யப்படும் புண்ணிய பாபு, மிஸ்ரமகர்மானுசாரங்களாலேயே ஊழ்வினை

யீன்படி ஜென்மங்கள்தோறும் உச்ச நீச்சர்களாகவே சிருஷ்டிகாலம் தொடர்ந்து அனாதியாய் வந்துக்கொண்டிருக்க ஜாதி ஜென்மனைப்போல் கர்ம கர்மங்களையும் பேதமில்லாமல் ஒன்றாய் செய்யாமல் ஜாதி ஜென்மங்களைமட்டில் ஒன்றாய் செய்வது எவ்வண்ணம். அவைகளையும் சொல்லவேண்டும்.

# ஜாதி ஜென்ம சமுச்சியம்.

ஜாதிபேதமத்தால் ஜென்ம பேதங்களுண்டோ? ஜென்ம பேதமத்தால் ஜாதிபேதமுண்டோ? ஜென்ம ஜாதியிரண்டும் ஒன்று வேறு ஜாதிகள் வேறு ஜென்மங்கள் வேறென்றால் ஜாதிகள் வேறாயும், ஜென்மங்கள் வேறாயுமுள்ள உலகங்களெது? நீங்கள் எந்த ஜாதி ஜென்ம குல பேதமத்தவர்களுக்கு பிறந்தவர்களோ அவைகளையும். ஜாதி ஜென்மம் இரண்டும் ஒன்றே என்றால் ஜாதிபேதமில்லாத ஜென்ம பேதமும் ஜென்ம பேதமில்லா ஜாதி பேதமில்லாமலிருக்கவேண்டு மல்லவா அப்படிக்கிருப்பவர்கள் யார் நீங்கள் ஜெகத்திலுள்ள சகல பேதத்தையும் ஒப்புக்கொண்டவர்களாயிருக்க மனுஷிய ஜாதிகளில் மட்டில் பேதமில்லை யென்று சொல்லவந்தது எந்த பிரமாணங்களைக்கொண்டோ அவைகளையும் விஜாதிகளில் பேதமுண்டு சஜாதிகளில் பேதமில்லை என்று சொல்வீர்களேயாகில் சஜாதிகளில் ஜென்மம் ஒன்றாயிருப்பதுண்டா ஜாதிபேதமத்தவர்கள் ஜாதிபேதமத்தவர்களையும், ஜாதிபேதமத்தவர்கள் ஜென்ம பேதமத்தவர்களாயும் ஜென்மபேதமத்தவர்கள் ஜென்மங்கள் அத்தவர்களையும், ஜென்ம பேதமத்தவர்கள ஜென்மங்கள் அத்தவர்களாயும் இருக்கவேணுமேயன்றி ஜென்ம ஜாதி ஜாதிகள் ஒன்றென்று அவைகளின் பேதமாத்திரமில்லையென்று சொல்வது அசம்

பாவிதமே யல்லவா ஜெகத்தில் ஜெனித்த ஒவ்வொரு பிராணிகளுக்கும் ஜென்ம ஜாதிகள் வேறுபடாமல் ஒன்ருயே இருக்கவும் அப்படிக்கே உருவ நாமங்களும் ஒன்ருயே இருக்கவும, ஜென்ம ஜாதிகளை வேருயும் பிரிக்க வல்லவர்களு முண்டோ ஜென்மஜாதிகளை விட்டு உருவ நாமங் களும் உருவ நாமங்களைவிடடு ஜென்ம ஜாதிசளுமுண்டா இப்படிக்கு இவ்விரண்டும் ஒன்ருயிருப்பதால் இவ்விரண்டும் ஒன்றுபட்டு ஜாதி ஜெ ன்மங்களெல்லாம் ஒன்றுபடும் காலத்தில் ஜகத்தில் ஜாதிபேதமத்த இரு ப்பதும் உண்மையே ஒரு வித்திலுண்டாகும் ஒரு விருக்ஷம் பல வித்து க்களை உண்டாக்காமல் ஒரேவித்துக்களை உண்டாககுவதும் உண்மையே.

## ஜன்ம கர்ம ஸமுச்சயம்.

உலகத்தில் அநேக விதங்களான கர்மங்கள் எற்பட்டிருப்பதற்கும் அநேக ஜாதி ஜென்மங்கள் எற்பட்டிருப்பதற்கும் காரணங்களை முன் தெரிந்துக்கொண்ட மேல் ஜாதி ஜென்மங்களும்: ஜாதிஜென்ம பேதங் களும் யார்க்குண்டு யார்க்கில்லை என்டதை போதிக்க வெளிவரவேண் டும், வந்தவழியும் போகும் வழியும் தெரியாமல் ஜாதிபேதமில்லை எல் லா ஜாதிகளும் ஒன்றே என்று சொல்லிக்கொண்டு வெளிவந்தது மூட லேயாகும், ஜன்மங்களுக்குப் பீஜம் கர்மங்களாயும், கர்மங்களுக்குப் பீ ஜம் ஜென்மங்களுமாயிருட்டதை தெரிந்துக்கொண்டதாவதுண்டா கர் மங்களைவிட்டு ஜென்மங்களும் ஜென்மங்களைவிட்டுகர்மங்களும் இல்லை என்பதை தெரிந்துக்கொண்டதுண்டா அல்லது கர்மங்கள் வேருயும் ஜென்மங்கள் வேருயும் இருப்பதை நீங்களாவது அல்லது உலகில்

வேறுயாருவது கண்டதுண்டா அல்லது ஜென்மங்கள் ஒன்றாயிருப்ப தாவது கர்மங்கள் ஒன்றாயிருப்பதாவது கண்டதுண்டா ஜென்ம பேதங் களால் செய்யப்படாத கர்மபேதங்களும். கர்மபேதங்களால் [illegible] ஜெ ன்ம பேதங்களுமுண்டோ இப்படிக்கான பேதங்களன்றி பலபேதந்த விதத்தனை ஜாதி ஜென்ம கர்மபேதங்களுண்டாக்கப்பட்டதைச் சொல் லவேண்டும். மண்ணுலகில் மண்ணுலுண்டாகும் மனித மிருகாதி சகல ஜன்ம, ஜாதி, வஸ்து ஜாதங்களைத் தவிர மண்ணுலகைச் [illegible] க்கொண்டு வருவதில் எந்தெந்த ஜாதி ஜென்ம மனித கோட்டத்தில் எந்த ந்த மனித குமாரர்களாய் உதிக்கிறார்களோ அவரவர்கள் அந்தந்த ஜாதி ஜென்ம ஜாத வம்ஸத்தார்களாகவே வம்ஸ பரம்பரையாய் வந்துக்கொ ண்டிருக்கும் விருக்ஷ பீஜ நியாயம்போல் அந்தந்த ஜாதி பீஜங்களுக்கு ஒரே விருக்ஷமாயும், ஒவ்வொரு விருக்ஷங்களுக்கு பல பீஜங்களாயுண்டா ய் பெருகிக்கொண்டு வருவதுபோல் மனிதர்களிலும் பலிகி பெருகி வந் துக்கொண்டிருப்பதை மனிதர்களால் எப்படி மாற்றக்கூடும். என்பதை யும் யோஜியாமலும், சகலவிதமான கர்மங்களைத்தான் ஒருவிதமான கர் மங்களாக எப்படி செய்யக்கூடுமென்பதையும் யோஜியாமலும் ஜென்மங் களுக்குக் காரணம் கர்மங்களும் கர்மங்களுக்குக்காரணம் ஜென்மங்களுமா யிருப்பதையும் யோஜியாமலும் போனது எந்தக் காரணத்தைக்கொண் டோ அதையும் சொல்லவேண்டும். ஜாதிகளெல்லாம் ஒன்றாயிருந்தால் ஐக்கிய பத்தியமாயிருக்கலாமென்று கேட்கிறீர்களேயானால் ஒரே ஜாதி குல கோத்திர குடும்பஸ்தர்களான ஒன்றான ஜாதி [illegible] தாய் பெண்டீர் மக்கள் தமயன் தம்பிகள் ஒருவர்க்கொருவர் சத்துருக்களாயிரு க்கும் காரணமென்ன இதரஜாதிகள் ஐக்கிய பத்தியமாயிருக்கும் காரண மென்ன. இவைகளுக்கெல்லாம் மனம் காரணமா மாகூஸ காரணமா அதையும் சொல்லவேண்டும்.

# பகுத்தறிவு.

பகுத்தறிவென்பது ஜகத், ஜீவ, பரங்களை பகுத்தறியும் அறிவுக்கு பெயர் பகுத்தறிவாகும். இந்த அறிவு வுள்ளவர்கள்தான் மனிதர்களென்று சொல்லப்படும். இப்படிக்கரியாதவர்கள் மிருகங்களுக்கு எவ்வளவுண்டோ அவ்வளவு பகுத்தறிவுடையோர்களென்பதில் ஐயமில்லை. இவர்களை அந்தக்காரணமென்கிற மனோ புத்தி சித்த அகங்காரமுடையவர்களேயாம். இந்த அறிவு சகலமான மனுஷிய மிருகாதிகளுக்குமுண்டு. ஆகையால் சமனாகச் சொன்னோம். மனிதர்களாய் பிறந்தமேல் ஜெகத் ஜென்ம, ஜாதி வஸ்துக்களின் பகுத்தறிவாவது இருக்கவேண்டும் அதாவது சஜாதி, விஜாதி பேதங்களாவது தெரியவேண்டும், இந்த சஜாதி விஜாதிகளில் ஒவ்வொரு சஜாதியிலுமுள்ள பேதங்களாவது தெரிந்துக் கொள்ள வேண்டும். அது எப்படி எனில் சகல வஸ்துக்களையும் காண்பது கண். அதை வகுப்பது மனம் இன்னின்ன வஸ்துக்களென்று தீர்மானிப்பது புத்தி. சமுஷ்டியான சஜாதி மனிஷியர்கள் இவனிவன் இன்னின்ன மனுஷியனென்றும், இன்னின்ன குலகோத்திரத்தானென்றும், அறிவதே பகுத்தறிவாகும். இந்த அறிவானது எல்லா மிருகங்களுக்குமுண்டு இவைகளில் சுவானமானது ஜனங்கள் சமுஷ்டியாய் கூடி இருந்தபோதிலும் இன்னின்ன மனுஷியர்கள் பிரத்தியார்களென்றும் இன்னின்ன மனுஷியர்கள் நமக்கு ஆண்டைகளென்றும் கண்டு தெரிந்துகொண்டது எந்த அறிவோ அதற்குத்தான் பகுத்தறிவு என்று சொல்லப்படுமென்று அறிவீர்களாக. இப்படிக்கான பகுத்தறிவுங்கூட இல்லாமல் எல்லா மனித ஜாதிஜென்மங்களும் ஒன்றே என்று சொல்லும் இவர்களை பகுத்தறிவுள்ளவர்களென்று எந்த விஷயத்தில் சொல்லக்கூடும். ஜன்ம, ஜாத, ஜாதி வஸ்துக்களின் பகுத்தறிவே இல்லாதவர்களு

க்கு ஜகத் ஜீவேஸ்வர பகுத்தறிவும் உண்டாவதுண்டோ பகுத்தறிவில் பாரமார்த்த பகுத்தறிவென்றும், வியவகாரிக பகுத்தறிவென்றும் இருவிதம். பரலோக ஸாதகமான பகுத்தறிவே பாரமார்த்திகமாயும், இகலோக ஸாதகமான பகுத்தறிவே வியவகாரிகமாயுமாகும். இப்படிக்கில்லாமல் சகல ஜாதிகளும் ஒன்றென்பதாவது அந்தந்த சஜாதிகளை சஜாதிகளென்றாவது சொல்வது பகுத்தறிவல்ல. அந்தந்த சஜாதிகளுக்குள்ளே இருக்கும் பேதங்களை பகுத்தறிவதே பகுத்தறிவாகுமென்று அறிக. இகலோக பகுத்தறிவும் பரலோக பகுத்தறிவும் இல்லாதவர்கள் இரண்டும் கெட்டவர்களே அல்லவா

## சகல பேதங்களான உயர்வு தாழ்வுடன் கூடினதே ஜகத் என்பது.

உலகில் நாமரூபங்களையுடைய ஜகத்தில் ஜங்கம, ஸ்தாவரங்கள், நிரசமான சகல வஸ்துக்களிலும் பேதமில்லாத வஸ்துக்களும் உச்ச, நீசமில்லா வஸ்துக்களுமுண்டா அதுகள் எதுவோ அவைகளையும் உச்ச நீசமில்லா தொழில்களையும் சொல்லவேண்டும். இப்படிக்கான ஜெகத்துக்கு உயர்வுதாழ்வென்ன பேதா பேதங்களென்ன, கர்ம பேதங்களென்ன, இப்படிக்கு ஸ்ருஷ்டிக்கப்பட்ட இப்படிக்கான உலகத்திலுள்ள மனுஷிய ஜாதி ஜெனங்களின் மட்டில் பேதா பேதங்களும், உயர்வு தாழ்வுகளும் கர்மபேதா பேதங்களில்லாமலிருப்பது எந்த மத, சாஸ்திர, சட்ட நடவடிக்கைகளின்படிக்கோ அதைச் சொல்லவேண்டும், இப்படிக்கு யாதொரு விவஸ்தைகளுமற்ற லோகத்தையாவது, தேசத்தையாவது சொல்லவேண்டும்.

# காருண்ணியம்.

உலகத்திலுள்ள ஜனங்களுக்கு உண்டாயிருக்கும் காருண்ணிய ஐக்கிய பத்தியமானது ஜென்மங்களைப்பற்றியா ஜீவர்களைப்பற்றியா சகல ஜாதி மத வேத சாஸ்திரங்களும் ஜீவகாருண்ணியங்களைச் சொல்லுகிறதா ஜென்ம காருண்ணியங்களைச் சொல்லுகிறதா ஜனங்கள் ஒருவர்க்கொருவர் ஜென்மகாருண்ணியத்தை உடைத்தாயிருக்கிறார்களா ஜீவ காருண்ணியத்தை உடைத்தாயிருக்கிறார்களா. ஜென்ம காருண்ணியத்தை உடைத்தாயிருக்கிறார்களென்றால் உடல்களை விட்டு உயிர்கள் பிரிந்த மேல் உடலை புதைத்தோ பொசுக்கியோ விடுகிறார்கள் அல்லவா ஜென்மகாருண்ணிய முடையவர்கள் அப்படிக்குச் செய்யலாமா உயிர்பிரியுமளவும் உயிர்களுக்கு உடல்கள் வசிக்குமிடமாயும் அதின் அவயவங்கள் தொழில் கருவிகளாயும் இருப்பதால் அவ்வுடல்கள் இருக்கவேண்டுமாயிற்று. ஆனால் அவ்வுடல் உயிரென தொழிலாளிகளாயிருப்பதில்லை. தொழிலாளிகளான உயிர்கள் மேல் சொன்ன உடல் தொழில் கருவிகளைக் கொண்டு சகல தொழில்களையும் உயிர்களே நடத்தப்படுகிறது. உடல் கருவிகளால் நடத்தப்படுகிறதில்லை. ஆகையால் நீங்கள் ஜீவகாருண்ணிய முடைய ஜீவர்களா ஜென்ம காருண்ணிய முடைய ஜென்மங்களா நீங்கள் போதிப்பதெல்லாம் ஜீவர்களுடைய மஞ்ஞுபுத்தியை உத்தேசித்தா மாம்ச உருவங்களான ஜென்மங்

களை உத்தேசித்தா அதைச் சொல்ல வேண்டும். ஸாதா விருத்தியில் ஜீவிக்கிற ஏழை ஜனங்களுக்கு பாக்கியவான்களான சனவான்கள் அவர்களின் ஜீவனத்துக்கு பொருள்களைக்கொடுத்து காப்பாற்றி வருவது காருண்ணியமா பிறப்பினாலேயே உண்டான ஜாதி, ஜென்ம, குல விவஸ்தைகளை கொடுத்து வருவது காருண்ணியமா. அதைச் சொல்லவேண்டும்.

விவஸ்தை அத்த மனிதர்கள் மிருகங்களை
விடவும் ஈனர்கள் என்பது.

---

மனித ஜாதிகளில் பேதமில்லையென்று வெளியாகாதது மனித ஜாதியர்களில் காணே ஸ்திரீ ஜாதி யென்றும் புருஷ ஜாதியென்றும், நபும்ஸகர்களென்றும் அநேக பேதங்களாயிருப்பதைக் கண்டதுண்டா இல்லையா தந்தை தாய் பண்டர், மக்கள் சகோதர சகோதரிகள் முதலான அநேகர்கள் பேதப்பட்டிருப்பதைக் கண்டதுண்டா இல்லையா ஜாதி ஜென்மங்களில் பேதமில்லை. எல்லாம் ஒன்றுதானென்றால் விவஸ்தைகளும் அத்து மூறைக்கேடுகளுமத்து விபசாரங்களுமத்து, சந்ததிகளை விருத்தி செய்துக்கொண்டு வரலாமென்பதை உலகத்திலுள்ள சகல ஜனங்களும் சம்மதிப்பார்களா தவிர ஓரே ரக்தமாம்ஸ ஜாதி, ஜென்ம, குல, கோத்திர ததினுதித்த தந்தை, தாய், மக்கள், சகோதர சகோதரிகள் எல்லாம் ஓரே ரக்தமாம்ஸ ஜாதி, ஜென்ம குல கோத்திரதார்களாகவே இருக்க அவர்களுக் குள்ளேவ ஸ்திரீ புருஷ, சம்பந்தங்கள் செய்துகொள்ளாமல் அன்னிய ஜாதி,

குல கோத்திரத்தார்களில் சம்மந்தம் செய்து வெவ்வேறு படு
வானேன் ஒரு ஜாதி குலத்தோனுக்கு பிறந்த பெண்ணை மற்
றொரு ஜாதி குலத்தோனுடைய புத்திரனுக்குக் கொடுப்பது
ம் அப்படிக்கே பெற்றுக்கொள்வதுமாயிருக்கும் காரணமென
ன இந்தபேதங்கள் எப்படிக்கு வந்தது

## ஜாதிச் சேர்க்கை எந்த நன்மையான பிரயோ ஜனத்தைப் பத்தி என்பது.

ஜாதிச்சேர்க்கை எந்த நன்மையான பிரயோஜனத்தைப்
பத்தி என்றால் உலகத்தோரெல்லோரும் ஐக்கிய பத்தியமாய் ஒ
ற்றுமையாகவே இருக்கும் பொருட்டு என்றால் ஒரு ஜாதி குல
த்தோர்களான தந்தை தாய்மக்கள் அண்ணன் தம்பிமார்கள்
ஒற்றுமை இல்லாமல் ஒருவர்க்கொருவர் சத்துருக்களாயிருக்
கும் காரணமென்ன ஒருவர்க்கொருவர் உதவியாயிருக்கும்பொ
ருட்டென்றால் ஒருவர்க்கொருவர் பிரதிப்பிரயோஜனமன்றி ஒரு
வர்க்கொருவர் உதவி செய்து வருவதுண்டா மனிதர்கள் எல்
லோரும் மனித உருவத்தில் ஒன்றாய் இருப்பதால் மனிதர்
கள் எல்லோரும் ஒரே ஜாதி என்று சொல்லுகிறோமென்றால்,
உருவமே காரணமானால் மண், கல், கட்டை, உலோகங்களில்
செய்திருக்கும் மனித உருவங்களும் ஒன்றாயே இருக்கிறது அ
வைகளும் மனிதர்களே ஆகவேண்டும் இவைகளுக்கு உயிரில்லை
யே என்றால் உயிர்கள் வேறு, உடல்கள் வேறு இவ்விரண்டும்

றென்று உங்கள் நோக்கம் உடல்களைப்பற்றிய உயிர்களைப்பற்றி யா மண் கல், கட்டைகளைவிட உடல்கள் ஆபாசமா சிரேஷ்டமா உயிர்களுக்கு அறிவுண்டா உடல்களுக்கு அறிவுண்டா நீங்கள் சொல்லுகிற + ஐக்கிய மத்தியமாவது, ஒருவர்க்கொருவர் உதவிபுரிவதாவது புண்ணிய பாப சுக துக்கங்களாவது, காமக் குரோத சுகதுக்கங்களாவது கருணையாவது, ஞாகத்து வேதங்களாவது, மேஜை, முக்தியாவது, பிறப்பு இறப்புகளாவது இவைகளெல்லாம் உயிர்களுக்குண்டா? உடல்களுக்குண்டா என்பதை யோசித்து விடை அளிப்பீர்களாக.

முற்றிற்று.